# நுழைவாயில்

முரசொலி பொங்கல் மலர்
ஆண்டுதோறும் அண்ணனின் வாழ்த்
தோடு மொட்டவிழ்க்கும். ஆனால்,
இந்த ஆண்டு அண்ணன் எழுதவில்லை.
இன்னும் ஆறுதிங்கள் அவர் எழுத்தை—
பேச்சைத் தமிழகம் சுவைக்க இயலாது.
கூண்டுப்புலியென அவர் ஆக்கப்பட்டுவிட்டார்.
இருட்பேழையில் ஒளிமுத்தாய் அவர் பூட்டப்
பட்டுவிட்டார்.

அவருடன் மதியழகன், அன்பழகன், மதுரைமுத்து
மற்றும் மாவீரர் பல்லோர் "மங்கையொருத்தி தரும்
சுகமும் எங்கள் மாத்தமிழுக்கீடில்லை" என்ற மன
உணர்வோடு சிறைக்கூடுகளில் அடைபட்டுக் கிடக்
கின்றனர்.

பொங்கல் திருநாள் — வீட்டிலிருந்து ஆடிப்பாடி, அகமகிழ்ந்து
அருமைத்துணைவி, ஆசைச்குழந்தை உற்றோர் பெற்றோர் அனை
வருடன் குலவிக் கொஞ்சும் இன்பம் அத்தனையும் "தமிழ்காக்கச்
சிறை புகுந்தோம்" என்ற ஒரு நினைவிலேயே அவர்களால் பெற
முடியும் காராக்கிரகத்தில்!

விழா எடுக்கும் வேளையில் அந்த வீரத்திருவிளக்குகள் நம்மிடை
இல்லையே என்ற வேதனைவேல் நம் விலாவைக் குடைந்த
வண்ணமிருக்கிறது.

தமிழகத்தின் இருள்விலக்க, புனிதப்பணி ஆற்றச் சென்றிருக்கும்
அந்த மறவர் பெருமக்களுக்கெல்லாம் நமது அன்பு வணக்கத்தை
அவர் இருக்கும் திசைநோக்கிச் செலுத்திக்கொள்வோம்.

ஆயிரங்கட [illegible] த்திமுக்கும் [illegible]ரம்—ஆங்காங்கு நகராட்
சித்தேர்தல் [illegible]யாட்டம் -- இடையிலே

வழக்கு--சருங்கச் சொன்னால்: "ஆவின மழைபொழிய" என்று தொடங்கும் பழம்பாடல் ஒன்றின் நிலைபோனக் கொள்ளலாம்; இத்தகு இக்கட்டான சமயத்தில் 'பொங்கல் மலர்' வெளி வருகிறது.

பிறந்த குழந்தையைப் பார்த்துத் தாயின் பிரசவ வேதனையைச் சிலர் யூகித்துக்கொள்வார்கள்.

அந்த அடிப்படையில் மலரைப்பாருங்கள். வழக்கமான எந்தப் பொலிவிலும் குறை வைக்காமல் மலர் உங்கள் மென்கரங்களில் தரப்பட்டிருக்கிறது.


நான் அதிகம் எழுதவில்லை. காரணத்தை அறிவீர்கள். அனுதாபத்துடன் மன்னிப்பீர்கள். அதையும் அறிவேன் நான்.

கழகப் பாசறைக்கோர் போர்க்கருவியெனப் புகழப்படும் 'முரசொலி,' இடர்மிகுந்த கட்டங்கள் பலவற்றைத் தாண்டி சுடர்முகம் தூக்கி நிற்கக் காரணமாய் இருக்கின்ற வாசகர்கள், விற்பனையாளர்கள் அனைவருக்கும் எமது வாழ்த்து!

கடமையிலே கருத்தான அலுவலகச் சோதரர்கட்கு என் அன்புநிறை பாராட்டுக்கள் என்றென்றும் உண்டு!

காந்தீயவழி நிற்பதே கழகத்தின் போர்முறை என விளக்கும் முகப்போவியம் தந்த ஓவியமன்னர் மாதவனும், மலர் முழுவதும் சித்திரக்குவியல் தரும் ஓவியச்செம்மல் செல்லப்பனும், கருத்தோவியங்கள் தந்திட்ட சான்றோரும் மலரை அணிசெய்கின்றனர். அவர்க்கு நன்றி!

மலர் கொணரும் மாறன், மல்லி, அடியார், செல்வம், அமிர்தம், ஓவியர் ஜெயா மற்றுமுள்ள அனைவர்க்கும் உம்முடன் சேர்ந்தளிப்பேன் உவகை பொங்கப் பொங்கல்வாழ்த்து!



# வெள்ளையர் ஆட்சி வேரூன்றிய வரலாறு

புதியகால அரசியல், பதினெட்டாம் நூற்றாண்டில், பிரிட்டிசு வல்லரசுக்கான அடிப்படை கோலப்பட்டதிருந்து துவங்கியதாகக் கொள்ளலாம். பிரிட்டிசு வல்லரசின் அடிப்படைகோலப்படுவதற்குக் காரணமாக இருந்த சூழ் நிலைகள் இரண்டு. ஒன்று "ராபர்ட் கிளைவ்" மற்றொன்று "பிளாசி சண்டை."

1757 சூன் 23-ல் பிளாசிசண்டையில் ராபர்ட் கிளை வுக்கு ஏற்பட்ட வெற்றிதான், பிரிட்டிசு வல்லரசுகளுக்கு இந்தியத் துணைக்கண்டத்தில் விந்திட்டது. பிளாசி சண்டையில் ராபர்ட்கிளைவ் வங்காள நவாப்பான சிராஜ் உத்-தௌலாவை எதிர்த்தான். சிராஜ்-உத்-தௌலா படையில் வீரர்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருந்தும் சிராஜ் தோற்றுப்போகும்படியான நிலைமை ஏற்பட்டது, ராபர்ட்கிளைவ் வீரத்திலோ அல்லது படை வலிவிலேக் கொண்டோ வென்றுவிடவில்லை. ராபர்ட் கிளைவின் வஞ் சகம், சூது; சூழ்ச்சி ஆகியவைதான் அவனுக்கு வெற்றியைத் தேடித்தந்தன, சிராஜ், அவனுக்குப் படைத்தலைவனாக இருந்த மீர்ஜாபரால் காட்டிக்கொடுக்கப்பட்டான், மீர் ஜாபருக்கும், ராபர்ட்கிளைவிற்கும் இடையே அமின்சந்த் என்பவன் இடைத்தரகன் வேலை பார்த்தான். இடைத் தரகன் அமின்சந்தை பிறகு ராபர்ட்கிளைவ் ஏமாற்றினான். பின்னர் மீர்ஜாபரை மீர்காசிம் என்னும் படைத்தலைவன் காட்டிக்கொடுத்தான். மீர்ஜாபர், மீர்காசிம் ஆகிய இரு வரிடமிருந்தும் ராபர்ட்கிளைவ் ஏராளமான பொன்னையும், பொருளையும் கறந்து, அவர்களையும், அவர்கள் ஆண்ட

நாவலர் நெடுஞ்செழியன்

அரசையும் வறியவர்களாக்கி மீர்ஜாபரை வீழ்த்திவிட்டுப் பட்டத்திற்குவந்த மீர்காசிம் ஆங்கிலேய வணிகர்கள் கல்கத்தாவில் நாணயச்சாலை ஒன்றை நிறுவிக் கொள்வதற்கும், அவர்களுடையநாணயங்களை வங்காளத்தில் புழக்கத்தில் விடுவதற்கும் அனுமதியளித்தான். அதோடுமட்டுமல்லாமல் பர்துவான், மிதுனப்பூர், சிட்டகாங் என்ற மூன்று மாநிலங்களையும் ஆங்கிலேய வணிகக் குழுவிடம் ஒப்படைத்து, அவற்றிலிருந்து வரிவசூல் செய்துகொள்ளும் உரிமையையும் அவர்களுக்கு அளித்தான். பிரிட்டிசு வல்லரசு இந்திய மண்ணில் வேரூன்றுவதற்கு இந்த நிகழ்ச்சிதான் அடிப்படையாக அமைந்தது.

இந்தியத்துணைக்கண்டத்தில் ஆண்டுகொண்டிருந்த பல்வேறு அரசர்களிடையேயும் ஒற்றுமை இல்லாத காரணத்தாலும், ஒருவர்மீது மற்றொருவர் படையெடுத்து ஒருவரையொருவர் ஒழிக்க முயன்றுவந்ததாலும், ஒவ்வொரு அரசரும் தமக்குஉகவியாக இருக்கும்படி ஆங்கிலேயர்களைக் கெஞ்சிக்கேட்டுஅவர்களுடைய தயவைப்பெற துடியாய்த் துடித்துக்கொண்டிருந்த காரணத்தாலும், உதவி செய்யவந்த ஆங்கிலேயர்கள் தாங்கள் செய்த உதவிக்காக நாட்டின் பகுதிகளையும் அவற்றின் வருமானத்தையும் பரிசுப் பொருள்களாகப் பெற்றுவந்ததாலும், தமக்குவேண்டும் பொன்னையும், பொருளையும், மண்ணையும் வழங்க அரசர்கள் மறுத்தால், அவர்கள்மீது படையெடுத்து அவர்களின் நாட்டைக் கைப்பற்றிக் கொண்டு வந்தாலும், அடங்க மறுத்த அரசர்கள் அத்துணைப் பேர்களையும் மெல்ல மெல்ல அடக்கித் தம் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்தாலும், மற்ற ஐரோப்பிய வணிகக் குழுவினர்கள் வேறொன்றி, ஆதிக்கத்தைப்பரவச் செய்யாதவாறு அவர்களைத் தடுத்து நிறுத்தித் தம் முழு ஆதிக்கத்தையும் நிலைநாட்டிய காரணத்தாலும் ஆங்கிலேயர்கள் நிலைத்ததொரு வல்லரசை இந்தியாவில், பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் பகுதியில் நிலைநாட்ட முடிந்தது.

இங்கிலாந்திலிருந்து போக்கிரி-கயவன்- பொதுமக்களுக்குத் தீங்கு இழைப்பவன்--மூர்க்கன் முரடன் என்று கருதப்பட்டு, இந்தியாவிற்குக் கிழக்கிந்திய வணிகக் குழுவுடன் அனுப்பி வைக்கப்பட்ட ராபர்ட் கிளைவ் மீண்டும் 1767-ல் இந்தியாவை விட்டுத் திரும்பும்போது கவர்னர் ராபர்ட் கிளைவாகச் சென்றான், கணக்கன் வேலை பார்க்க வந்த கிளைவ் கவர்னராக திரும்பினான். திரும்பிப் போகும்போது பிரிட்டிசு வல்லரசுக்கானஅடிப்படையை இந்தியத் துணைக்கண்டத்தில் நிலைநாட்டிவிட்டு,ஏராளமான பொன்னுடனும் பொருளுடனும் இங்கிலாந்தில் போய் இறங்கினான். ஒன்றுக்கும் உதவாதவன் என்று இங்கிலாந்திலிருந்து கப்பல் புறப்பட்டான், ஒரு நவாப் போல மீண்டும் வந்து சேர்ந்தான். அவன் இங்கிலாந்தில் ஒரு இந்திய நவாப் போல வாழ்க்கை நடத்தினான். ராபர்ட் கிளைவ் வஞ்சகம்-சூது-சூழ்ச்சி மோசடி ஏமாற்று - கொலை - கொள்ளை ஆகிய முறைகளையெல்லாம் கைபாண்டுதான் ஆங்கில ஆட்சியை இந்தியாவில் நிறுவினான் என்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு இங்கிலாந்து பாராளுமன்றக் குழுவின் முன்னால் நிறுத்தப்பட்டான், கிளைவ் செய்த குற்றங்கள் அந்தக் குழுவினால் உணரப்பட்டன என்றாலும், அவன் இந்தியாவில் ஆங்கில ஆட்சியை நிறுவ அரும்பாடு பட்டான் என்று பாராட்டப்பட்டு விடுதலை செய்தனர்.


ராபர்ட் கிளைவிற்குப் பிறகு வாரன்ஹேஸ்டிங்ஸ் கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டுக் கல்கத்தாவிற்[illegible]னுப்பப்பட்டான். வங்[illegible]ன பம்பாய், [illegible] லங்கள் அவன் மேற்பார்வையின் கீழ் வைக்கப்பட்டன.

வாரன்ஹேஸ்டிங்ஸ் ஆங்கில ஆட்சியை விரிவுபடுத்துவதற்குப் பெருமுயற்சி எடுத்துக் கொண்டான். ஆங்கில ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்த அரசர்களிடமிருந்து பொன்னையும், வெள்ளியையும், அணிகலன்களையும், விலையுயர்ந்த பொருள்களையும் இலஞ்சமாகவும், இறையாகவும் வாங்கிக் கொண்டான். வரிசெலுத்தாத அரசர்களை ஆங்கில ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தான். சைப்பெண்ணுகிய பல அரச மகளிரிடமிருந்து ஏராளமான சொத்துக்களை அவர்களை மிரட்டியும், அச்சுறுத்தியும் கொள்ளையிட்டுக் கொண்டான். ஆங்கில ஆதிக்கத்தை இந்தியாவில் நிலைநாட்டுவதில், அன்ராபர்ட் கிளைவைக் காட்டிலும் மிக்க வெறிபிடித்தவனாக இருந்தான், வங்காளம் — பீகார்—ஒரிசா ஆகிய பகுதிகளில் நிலவி வந்த நவாப் ஆட்சியை அடியோடு அழித்து அங்கு ஆங்கில ஆதிக்கத்தை நிலைநாட்டுவதில் வெற்றி கண்டான். அவனுடைய நடவடிக்கை ஒவ்வொன்றிலும் பேராசையும், சுயநலமுந்தான் மிகவும் தலைதூக்கி நின்றன.

வாரன் ஹேஸ்டிங்ஸுக்குப் பிறகு ஆங்கில ஆதிக்கத்தை வலுப்படுத்த வந்தவன் லார்டு காரன்வாலிஸ் என்பவனாவான். அவன் 1786 இல் கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டு இந்தியா வந்து சேர்ந்தான். படையெடுப்பின்மூலம் இந்தியாவின் நிலப்பகுதியை ஆங்கில ஆதிக்கத்தினுள் முதன்முதல் கொண்டு வந்தவன் காரன் வாலிஸே ஆவான் என்று கூறலாம். திப்பு சுல்தானோடு போர் புரிவதற்குமுன்னால், ஆங்கிலேயர்கள் படையெடுப்பின் மூலம் ஒரு அங்குலத்தைக் கூட கைப்பற்றவில்லை என்று கூறலாம். வஞ்சகம் — சூது —மோசம்—ஏமாற்று ஆகிய

(தொடர்ச்சி 81-ம் பக்கம்)

# நினைத்ததும் நடந்ததும்!











பேச்சு கேட்க்க கூட்டம் வரும்; ஓட்டுப் போட ஆள் வராது என்று நினைத்தனர்
15 பேர் வந்ததும்
15-தானே! அடுத்த தேர்தலில் 0-தான் என்று பகற்கனவுகண்டு
குடும்பத்திலே கலகம் மூட்ட, சதிவேலை செய்து ஜூடாசை ஏவினர்


அனைத்தையும்
மீறி 15-5!
ஆனதும்,


கழகம் என்ற
அமைப்பை உடைக்
கத் தடைச் சட்டம்
கொண்டு வர;
தடைச் சட்டம்


காங்கிரசுக்கு அறைகூவலான
கழக அமைப்பைக் காத்து;
அதன் திட்டத்தை முறியடிக்க;
அண்ணா தந்த
ராஜதந்திரத் திட்டம்தான்
கழகத்தின் சட்டதிட்ட
மாற்றம்!
தி.மு.க
தடைச் சட்டம்

# புதிய புறம்

## மு. கருணாநிதி

வீரமேந்திய நெஞ்சம் படைத்த சங்ககால மறவர்களின் போர்க் குணத்தை - கொடைத் திறத்தை...

பாவேந்திய நாவேந்தர்கள் பாடி வைத்த ஒரு பெரும் காப்பியம் புறநானூறு.

கங்கையாற்றுக் கடும்புன லோரத்தில் வடவாரியரைக் கலக்கிய அந்தக் காலத்து நிண்மை நிறைந்த வீரத்தைப் போலவே புறநானூற்றின் நடையும் கடுமை நிறைந்த தாயிருக்கும்.


அத்தகு புறப் பாடல்கள் எளிய நடையில் இதுவரை இரண்டு வெளிவந்துள்ளன.

அனைவரும் சுவைக்கும் வண்ணம் புறப் பாடலில் எளிமை சேர்த்து - இனிமை கலந்து தரும் மூன்றாவது பாடல் இது:

பனி முட்டை அடை
காக்கும்
பசும்புல்லின் தரை
மீது
மணித் தேர் அசைவது
போல் மாதொருத்தி
நடந்து வந்தாள்







கனித் தமிழ்ச் சொல் உதிர்க்கும் புலமை மிக்காள்
காக்கை பாடினி பொன்முடியார்க்குத்
தமிழில் அவள் அக்காள்
அதியமான் நெடுமானஞ்சி—வேள் பாரி
வள்ளல் நாடன்
சேரமான் மாவெண் கோவன்,
கானப் பேர் தந்த வழுதி—மற்றும்
சோழனும் பெருநற்கிள்ளி
ஆகியோர் புகழைப்பாடித் தமிழுக்கு
அணி பல பூட்டி நின்ற
அறிவொளி ஔவை நல்லாள்!

காலைக் கதிரவன் போல் கை சிவக்கக்
கொடை வழங்கும்

காவலர்கள் வாழ்ந்திருந்த தமிழ்நாடு!
ஓலை கொண்டொருவன் போர் என்று
வந்து விட்டால்

மாலை சூடுகின்ற வேளையென்றும் பாராமல்
தோளைத் தொத்துகின்ற பெண்கிளியைப்
—புறம் விடுத்து.

வாளைக் கூரேற்றி வான் நோக்கி நிமிர்கின்ற
வீரமறவர்களின் தாய்வீடு.

பாலை குறிஞ்சிமுல்லை நெய்தல் மருதமென்று
நிலம் வகுத்து வாழ்கின்ற தமிழரிடை

சோலைப் பூவினம் போல் தமிழ்க் கவிதை
மலரவைத்தாள்.

தாயகத்துக் கற்புநிறை பிறழாத
காதல் சொன்னாள்—களம் சென்றூர்
வீரம் சொன்னாள்.


களத்தில்,
சாதல் இன்னே வரட்டு மென்று
சென்றுவிட்ட தலைமகனும்,

சந்தனத்துக் கட்டை போல மணக்கட்டும்
இலக்கியத்தில்
எனக் கூறிப்
பாதம் முதல் உச்சி வரை குளிர்கின்ற
தாய்க்குலத்தை
எண்ணி யெண்ணிப் பெருமை கொண்டாள்,
—தன்
பூவடிகள் புல்மீது அழுந்தியதால்
பனித்துளிகள் அழிந்துவிடும்.
போரடியில் நெல்மணிபோல் பகைவர்களின்
சிரம் வீழும் அமர்க்களத்தில்!
இதை நினைத்து,
நடக்கின்றாள் ஒளவை யம்மை!
நாமணக்கும் தமிழம்மை! அறிவம்மை!
அழகம்மை!
காலூன்றிப் பனியொத்தி வருகின்ற
தாயின் முன்
கோலூன்றிப் பிறிதொரு தாய் வந்து நின்றாள்.
"அடி! தும்பை மலர் முடிதாங்கி!
துவண்டு விட்ட காலிரண்டும்
வாழைத்தண்டாய்க்
குளிர்ந்துவரும் நேரத்தில்
நீ ஏன் வந்தாய்;
விற்புருவம் என்றுன் ஆளன்
அழைத்திட்ட காலம் போய்
வில்லுருவம் முதுகில் பெற்ற இள நங்காய்!
விழியிரண்டும் வேலென்றூர் அன்று;
வழி இருண்டு போனதென்று
கோல்கொண்டாய் இன்று!
தமிழ்நாட்டு முத்தெல்லாம் தீர்ந்ததென்று
பல் கழற்றிப்
பிறநாட்டு வாணிபத்தைச் செய்தவளே!
எங்கெழுந்தாய்? ஏன் பதைப்பு?




என்ன வாட்டம்?'' எனக் கேட்டுக்
குறும்பு செய்தாள் ஔவையம்மை!
வேலி போட முடியாது இளமைக்கென்று
தெரிந்த பின்னும்
கேலி பேசும் உன் போக்குப் புரிய வில்லை.''
எனமறித்து அந்தத் தாய் பேசலானாள்:—
''புண்பட்ட என்னகத்தில் புலமைத் தாயே,
உந்தன் கேலி,
பண்பட்ட தமிழ் மருந்தாய்ப்
பாய்வதை நான் உணருகின்றேன்
கண்கெட்ட பின்னும் எந்தன்
கரம் தொட்டு வணங்கிச் சென்ற
காளையை நான் மறக்கவில்லை.
மண் முட்டி எழுந்து நிற்கும் மாங்கன்றின்
தளிர்தான் மேனி
பொன்கொட்டிக் கொடுத்தாலும் வளையாத
மனவலிமை
புலிக்குட்டி விளையாடும் அவன் மடியில்!
புதர் விலங்கு நடுநடுங்கும் அவன் பிடியில்!
அந்த மகன் ஆசைமகன் அணிவகுத்தான்.
சொந்த மண்ணின் நலங்காக்கப்
பணிவகுத்தான்.''





முடிக்கவில்லை முதியவளும்;
பொறுக்கவில்லை ஔவைக்குக்;
குறுக்கிட்டாள்.
"களம் சென்ற மகன் வீரம் புகழ்ந்து கூறிக்
கண் கலங்காத் தர்ய் வீரம் காட்டுதலே
தமிழ் மரபு!
முதியவளே! மறவர் குல வழக்கிற்குப்
புதியவளாய் இருக்கின்றாய்—
வியக்கின்றேன்"
என்றாள்.

"முழுதும் கேள் பெருமாட்டி!
பழுதொன்றும் காணமாட்டாய்
என்நிலையில்!
அழுதழுது என் விழிகள்
வீங்கியதை மறுக்கவில்லை.
பொழுதெல்லாம் கவலையினால்
புலம்புவது பொய்யல்ல!
ஏனென்று தெரிந்து கொள்வாய்




நானென்றும் மறைக்க வில்லை!''
"சொல்" என்றுள் ஔவை
சொன்னாள் அவள்;-
"கொற்றக் குடை சாயாத கொடித்தேர்
மன்னர்
கற்றறிந்தபாவாணர் கடமைமிகுமாவீரர்
மற்றவர்க்கும் பெருந்தலைவர் அறிவாய் நன்று!
அவர் படையில் இருக்கின்றோர் பல்லோர்வீரர்
ஆட்டுக்கடா அணிவகுத்துச் செல்வதுபோல்
அரசர் பின் நடப்பதற்குத் தயங்கமாட்டார்.
ஆயிரம் பேர் மன்னர்க்குப் பின்னால் இருந்தும்
அவர் மட்டும் என் மகன்பால்
அளவற்ற அன்பு கொண்டார்.
போர் முனையில் ஓய்வெடுத்துக் கிடக்கும்
போது
'தேறல்' எனும் உற்சாகச் சாறுதனைத்
திறல்மறவர் அருந்துதற்குத்
திரண்டு நிற்பார்.
அப்போது மன்னரவர் என்மகனை
அருகழைத்து
அனைவரினும் அதிகபானம் அளித்து
மகிழ்வார்.
என் வாட்டம் இப்போது கேட்பாயம்மா!
என்புகழைத் தெப்பமாக்கி நரி மிதக்கும்
போர்க்களத்தில்
தலையுருட்டிப் பந்தாடும் பறவையினம்!
அத்தலையில் ஒரு தலையாய்
என்மகன் தலையும்
இருந்தாலன்றோ இறைவனளித்த
தேறலுக்குப்
பெருமையுண்டு
மன்னன் அன்பை மிகையாய்ப் பெற்றான்
மண்டையில் தேறலும் அதிகம் பெற்றான்
மாண்டனன் போரில்; புகழ்
பூண்டனன் எனும் காட்சி
காண்டிடல் அரிதோ எனக்
கலங்கினேன் அம்மா!
தவறு?'' என்றுள்.
அந்தத் தாயாக நான் இல்லையே என்று
அகமிக நொந்தாள் ஔவைப்பிராட்டி!

○ ○ ○

வெள்ளை வெள்யாட்டுச் செச்சை போலத்
தன்னை ரன்ன விளைய ரிருப்'ப்
புலர்மீது நீட்டிய மண்டையென் சிறுவனைக்
கால்கழி கட்டிலிற் கிடப்பித்
தூவெள் ளறுவை போர்ப்பித் திலதே.

-- புறம்-286-




# மாமலை அருவி

கவிஞர் வாணிதாசன்

அல்லும் நீள்பகல் அருகிஅ ருகியே
அயர்ந்த சாரலில் மெல்லநீ தவழ்ந்து
கல்லும் தேய்த்தனை; பாய்ந்துமேல் வழிந்து
கடந்து வந்தனை மாமலை அருவி!
சொல்லில் வல்லவர் பேருரை நயம்போல்
தொடர்ந்து வீழ்ச்சியாய் மாறினாய்; குளிர்நீர்ச்
செல்வம் தந்திடும் மின்வளம் அளித்தே
செழிக்கச் செய்தனை! வாழ்ந்திடும் உலகே!

செந்நெல் மாபலா வாழையும் கரும்பும்
செழிக்கச் செய்தனை செய்தனில்; மருதக்
கன்னல் தீமொழிக் கன்னியர் முகத்தைக்
காட்டச் செய்தனை தாமரை மலரில்
பொன்வி ளைத்திடும் உழவரின் தொழிலில்
பொங்கு மெல்லிசை அருவியே அடடா!
என்ன சொல்லுவேன்! கிள்ளையும் குயிலும்
என்று கற்றன உன்னிடம் உரையே!



உன்னில் எத்தனை எத்தனை கலங்கள் !
உன்னில் எத்தனை எத்தனை படகு !
பொன்னும் மாமணிப் பொருள்களும் பெரிய
பொதியும் தாங்கியே செல்வதை அறிந்தேன்
மன்னர் ஆட்சியை மக்களின் அரசை
வாழ வைப்பதும் நீஎன உணர்ந்தேன்.
என்ன சொல்லுவேன் உன்னரும் சிறப்பை !
இனிய பாடலுக் கீடெனல் முறைதீயா ?

கோடி கோடியாய்க் கொட்டியும் விலகாக்
கொல்லும் நோயினுல் நல்லுடல் மெலிய
வாடி வாடியே வருந்திய உயிர்கள்
வந்து மூழ்கியே நலம்பெறல் அறிந்தேன்.
காடு தாண்டியே நீள்மலே இடையே
கன்னிச் செந்தமிழ் போலநீ நிலைத்து
நாடு தாண்டியே வருபவர் எவர்க்கும்
நல்கும் மாமருந் தெங்கறிந் தனையோ ?

உன்னில் தோன்றிய மின்விசை யதனுல்
ஊரில் தோன்றிய இருள்கடிந் தனையே !
செந்நெல் நீள்வயல் நீரினை இறைத்தாய்
சிறுசி றுத்தொழிற் சாலைகள் இயக்கிப்
பொன்வி ளைத்தனை; புதுப்புதுப் பொருள்கள்
புவிக்க ளித்தனை; உன்னரும் புகழை
என்ன கூறுவேன் ! அருவிநீ இலேயேல்
ஏற்றம் கண்டிட இயலுமோ உலகே !

அள்ளி அள்ளியே மக்களுக் களித்த
ஆன்ற வள்ளலும் அழிந்தனர் அறிவேன் !
வள்ளல் வாரியே வழங்கிய பொருளும்
வற்றிப் போனதும் அழிந்ததும் அறிவேன் !
கொள்ள கொள்ளவும் குறைவுரு தளிக்கும்
குன்றம் சூழ்மலே அருவியே உனது
வெள்ள நீரினை வழங்கியும் குறையா
வீறு பெற்றவர் உலகினில் இலேயே.

# காதல் பிறந்தது!



துள்ளும் மீனை போல்வாள் ... முனம்
புள்ளி மயி லாவாள் ... மணம்
கள்ள மிலாத மகள் ... முகம்
வெள்கிட நாணுகிருள்.

ஆடை அணி வகையில் ... மனம்
நாடுதல் இன்னியவள் ... எங் நம்
ஆடி வருவாளே! ... முன்னர்
கூடிக் திரி வாளே!

ஏந்திழை தன் னுலே ... கருங்
கூந்தல் முடித்தாள்! ... அதில்
பூந்துணர் வைத்தாளே ... நுதல்
சாந்தும் அமைத்தாளே!

கண்ணில்மை பூ சுகிருள் ... கடைக்
கண்களில் பேசுகிருள் ... இதழ்ப்
புன்னகை வீசுகிருள் ... மொழி
என்னென்ன பே சுகிருள்!

செந்தளிர் போ லுடலில் ... நறுஞ்
சந்தனம் நீ வுகிருள் ... தனம்
வந்தை தரும் வகையில் ... இரு
பந்தென வீப்முகிருள்!

மின்னல் இடை தளரச் ... சடைப்
பின்னல் கிடந்த தசைய ... ஒரு
அன்ன நடை நடந்தாள் ... கொடி
என்ன அவள் படர்ந்தாள்!

செப்புச் சிலை போலே ... இவள்
ஒப்பனை செய்தாளே! ... இதை
எப்படிக் கற்றாளோ ... நீ
சொல்லடி பெண் மானே!

மாது திரிந்ததனுல் ... ஒரு
ஏதம் நிகழ்ந்ததில்லை ... இனிக்
காதல் மலர்ந்ததடி ... மனங்
காண விரிந்ததடி!

கவிஞர்
முடியரசன்

(டோரிலேக்கோட்டை. அதி காலை மணி 4-30 இருக்கும்; சின்னமலை அப்போதுதான் அரண்மனை முன்வாயிலில் வந்து உட்கார்ந்தான். தம்பி கிலேதாரும் உடன் வந்தான். கொத்தளத்தில் காவலிருந்த ஒரு வீரன் ஓடி வந்து)

வீர சாமி! வடக்கிருந்து ஒரு குதிரைப்படை வருவது போல் ஓசை கேக்குதுங்க.

சின: குதிரைப் படையா? (கிலேதார் ஓடிப் போய்க் கொத்தளத்திலேறிப் பார்த்து விட்டு வந்து)

கிலே: அண்ணே! ஆமாம். பெரிய குதிரைப் படை போல் இருக்கிறது. தம்பட்டப் பாறைக்குப் பக்கமாக வந்துவிட்டது. இன்னும் ஒன்றரைக் கல் தானே! கொஞ்ச நேரத்தில் கோட்டையை வளைத்துக் கொள்ளுமே என்ன செய்வது?

சின: (சிரித்துக் கொண்டே) என்ன செய்வது? இரண்டிலொன்று செய்ய வேண்டியதுதான். குதிரைப் படை புறப்படட்டும்.

(என்று கூறிக் கொண்டே எழுந்து. படைச்சால அறைக்குட் போய் ஒரு வெடியுடன் வெளியே வந்தான். சின்னமலை குதிரை எப்போதும் பயணத்துக்குத் தயாராய்க் கோட்டை வாசலில் நிறுத்தப் பட்டிருக்கும். சின்னமலை வெளியே வந்ததும் ஒன்றும் பேசாமல் குதிரைமேல் ஏறினான். அவ்வளவுதான்! அது இன்னபக்கம் போக வேண்டும் என்பதை அறிந்ததுபோல வடக்கு நோக்கிப் பறந்தது.)

(கிலேதார். குதிரைப் படையை வடக்கு நோக்கி விரைந்து வரும்படி கூறிவிட்டு அண்ணனைப் பின் தொடர்ந்தான்.)

(சின்னமலை குதிரை வடக்கு நோக்கிச் சாற்றிலும் அதி வேகமாகப் பறந்தது.

சின்னமலை குதிரை வரும் ஓசையைக் கேட்டவன் வெள்ளைக்கார குதிரைப் படைத் தலைவன் ஜெனரல் ஹாரீஸ்)

ஹாரீ: எதிரில் ஒரு குதிரை மிக வேகமாக வருகிறது. மெதுவாக வாருங்கள். அதோ வந்துவிட்டது. ஒரே குதிரைதான் வருகிறது. அடே அப்பா! என்ன வேகம்

(சின்னமலை குதிரை திடீரென நின்றது. அவ்வளவு தான் படீரென்று ஓர் ஓசை கேட்டது, ஹாரீஸ் குதிரை



# எதிர்பாராத வெற்றி





வந்த வழியே திரும்பி விரைந்து ஓடியது. எல்லாக் குதிரைகளும் அதைப் பின் தொடர்ந்தன. சின்னமலை அரச்சலூர் வரையிலும் (ஒன்றரைக் கல்) அக்குதிரைப் படையைப் பின் தொடர்ந்து சென்றன். அதன்பின் வெள்ளையர் குதிரைகள் வெருண்டோடுவதை வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றன.)

ஹாரீ: இதென்ன வம்பாக இருக்கிறது? நிற்க மாட்டாயா? (குதிரையை நிறுத்த முயலுகிறான். அது நிற்கவில்லை. தம்பட்டப் பாறைபிலிருந்து பதினைந்து கல் வடக்கே உள்ள ஈரோட்டில் போய்த்தான் குதிரை நின்றது. ஹாரீஸ் கீழே இறங்கி) அடேயப்பா! ரத்தம் சேராடிக் கிடக்கிறது, குண்டியில் எவ்வளவு பெரிய காயம்! இவ்வளவு பெரிய புண்ணுடன் எப்படித்தான் இவ்வளவு தூரம் ஓடியாந்ததோ? சோர்ந்து போச்சு. பாவம்! குதிரை சாகாமலும், கீழே விழாமலும் வலியுண்டாகும்படி சுட்ட சின்னமலையின் கைத் திறனே திறன்! கர்னல் மாக்ஸ் வெல்லைப் பற்றி நாம் நினைத்தது தப்பென்பது இப்போதுதான் தெரிகிறது.

ஒருவன்: அடடா! இவ்வளவு பெரிய காயமா? அடி சரியான இடத்தில் பட்டிருக்கிறது.

ஹாரீ: குறி தவறி இன்னும் கொஞ்சம் கீழே பட்டிருந்தால் குதிரை அந்த இடத்திலேயே கீழே விழுந்திருக்கும். ஆதலால் குறி தவறுதல் என்பதுதான் சின்னமலையிடம் கிடையாதே. மாலவல்லிப் போரிலேயே அவன் சாத்திறனைக் கண்டேன். இன்னும் கொஞ்சம் மேலே குறி பார்த்திருந்தால்!

ஒரு: ஒரே குண்டில் ஐயாயிரத்துக்கு (5000) மேற்பட்ட



குதிரைகளுள்ள ஒரு பெரும் படையை விரட்டியடித்த பெருமை சின்ன மலைக்கே உரிய தனிப் பெருமையாகும்.

ஹாரீ: ஆமாம். அதற்கென்ன ஐயம்! குதிரை மிகவும் களைத்துப்போயிற்று. இனித் தெற்கே போக எனக்கு மனந்துணியவில்லை. வாருங்கள். சங்கிரிக்கே போகலாம். மானக்கேடு! ஒரு குண்டுக்கு அஞ்சி ஓட வேண்டியதாயிற்று.

## காட்சி - 2

### ஓடாநிலைக்கோட்டை

கிலே: (வந்து பரபரப்புடன்) அண்ணே! அக்குதிரைப் படையை எப்படித் துரத்தினீர்கள்?

சின்: நான் துரத்தவில்லை; அக் குதிரைகள் ஓடின.

கிலே: சும்மா குதிரைகள் வந்த வழியே திரும்பி அப்படி விரைந்தோடுமா? ஒரு வெடியோசை கேட்டதே.

சின்: ஆமாம். நான்தான் சுட்டேன.

கிலே: அவ்வோசையைக் கேட்டா குதிரைகள் அப்படி ஓடின?

சின்: இல்லை, நீ 'பெரிய குதிரைப்படை போல் இருக்கிறது என்று கூறியவுடன், ஒன்று என் மனதுக்கு ஒன்றுபட்டது. முதலில் படைத்தலைவன் குதிரையை சாகாமல் நோகும்படி சுட்டால், அது வந்த வழியே திரும்பி ஓடும். படைத் தலைவன் குதிரை ஓடுதல் மற்ற குதிரைகளும் அதைப் பின் தொடர்ந்து ஓடும். குண்டடிபட்ட குதிரையை எளிதில் நிறுத்தி முடியாது. அப்படி அது ஒரு வேளை நின்றாலும் அதனால் போர் முன்னேற்பாடு எதிர்த்து நிற்க முடியாது. தன் குதிரையின்றி வேறு புதுக் குதிரையில் ஏறி அப்படைத் தலைவனால் திறமையாகப் போர்புரிய முடியாது. அதற்குள் நமது படை வந்துவிடும். இதைத் தவிர நாம் இப்போது செய்வது வேறொன்றும் இல்லை. என்பதே அது. அவ்வாறே தலைவன் குதிரையைச் சுட்டேன். அது திரும்பி ஓடவே மற்ற குதிரைகளும் அதைப் பின் தொடர்ந்து ஓடின. அவ்வளவுதான்!

கிலே: அவ்விக்கட்டான வேளையில் தோன்றிய அவ்வெண்ணம் மிகவும்நல்ல எண்ணம். இல்லாவிட்டால் இந்நேரம் நமது கோட்டை அவ்வெள்ளைக் குதிரைப் படையால் வளைக்கப்பட்டிருக்கும். இது எதிர்பாராத வெற்றி!

சின்: என்னவோ.....

கறுப்பன்: எசமான்! நம்ம இந்த வெற்றியைப் பற்றி எண்ணினால் எனக்கொன்று நினைவுக்கு வருகிறது. தேவாசுரப்போர் பதினெட்டாண்டுகள் நடந்ததெனவும், இராம இராவணப் போர் பதினெட்டு மாதங்கள் நடந்ததெனவும், மாபாரதப்போர் பதினெட்டு நாட்கள் நடந்ததெனவும் செங்குட்டுவன் கனகவிசயர் போர் பதினெட்டு நாழிகையில் முடிந்ததெனவும் இளங்கோவடிகள் பெருமையாகக் கூறுகிறார். (சிலப்: 27-8-10) ஆனால் தாங்களோ பதினெட்டு நொடிகூட இல்லாமல் ஓரே நொடிப் போதில் ஒரு பெரிய வெள்ளைக் குதிரைப் படையைப் புறங்காட்டி ஓடும்படி செய்து வெற்றிமாலை புனைந்து வீரர்களின், செங்குட்டுவன் போர்த் திறமையை அங்ஙனம் வியந்து பாடிய இளங்கோவடிகள் இன்று இருந்தால் தங்களின் இப்போர்த் திறமையை எங்ஙனம் வியந்திருப்பாரோ!

சின்: கறுப்பா! நீ நினைப்பது போல நான் அப்படி ஒன்றும் செய்துவிடவில்லை. என்னவோ நல்ல வேளையாக அந்த எண்ணந் தோன்றியது. அவ்வேளையில் அவ்வாறே செய்தேன். வெற்றி கிடைத்தது. அவ்வளவுதான் இதில் எனது திறமை என்ன இருக்கிறது?

கறுப்: அப்படியே இருக்கட்டுங்க எசமான்! அதன் பொருள்!

கிலே: பொருள் போர்த் திறமைதான்.

## காட்சி - 3

(கவர்னர் ஜெனரல் வெல்லெஸ்லி, ஜெனரல் பேர்டு, ஜெனரல் ஹாரீஸ் முதலியோர் சென்னைக் கோட்டையில்)

வெல்: மிஸ்டர் ஹாரீஸ்! நீங்கள் சொல்வது புதுமையாகவன்றே இருக்கிறது! குதிரையை நிறுத்த முடியவில்லையா?

ஹாரீ: ஆமாம்: அந்த இடத்திற்கும், ஈரோட்டிற்கும் பதினைந்து கல் இருக்கும். என்னால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு முயன்றும் குதிரை நிற்கவில்லை. அது சோர்ந்துபோன பிறகுதான் நின்றது.

வெல்: என்னவோ இதற்குமுன் நான் கண்டதுமில்லை; கேட்டதும் இல்லை! ஒரு பெரிய குதிரைப் படையை ஒருவன் துரத்தியடித்துவிட்டான் என்பதை. இது உலக அதிசயங்களில் ஒன்றுகவன்றே இருக்கிறது?

ஹாரீ: ஆமாம், நான்தான் இதற்கு முன்னே எங்குமிதற்கு செயலைக் கண்டிருக்கிறேன்?

போர்டு: இதுவரை உலகில் நடந்திராத புதுமையாக வன்றே இருக்கிறது இது?

வெல்: ஆமாம்: சின்னமலை ஒருவனேதான் வந்தானு?

ஹாரீ: ஆமாம், அவன் ஒரு வன்தான் வந்தான்.

வெல்: என்ன துணிச்சல், ஒரு பெருங் குதிரைப் படையை சிறிதும் பொருட்படுத்தா மல் ஒருவனுகத் தனித்து வந்து, ஒரே குண்டில் அப் படையைத் துரத்தியடிப்ப தென்பது நம்பமுடியாத ஒன்றுகவன்றே இருக்கிறது? ஒரே முறைதான் சுட்டானு?

ஹாரீ: ஆம்; ஒருதரந்தான் சுட்டான்.

வெல்: என்ன குறியோ? உல கங் கண்டறியாத போர் முறையாகவல்லவோ இருக் கிறது? இதுவரை எத் தனையோ களத்தில் எத் தனையோ வீரர்களைப் பார்த் திருக்கிறோம், இத்தகைய வீரனை இதுவரை பார்த் ததே இல்லை. குதிரைக் குக் குண்டு பட்ட புண் ஒரே இடத்தில்தான் இருந் ததா?

ஹாரீ: ஆமாம், ஒரே குண்டு தான் பட்டிருக்கிறது?

வெல்: ஒரே ஒரு குண்டுபட்ட ஒரு போர்க் குதிரை, தலைவ னுல் நிறுத்தமுடியாமல் பதி னைந்து கல் ஓடிற்று என்றுல் சின்னமலையின போர்த் திறமை கண்கட்டு வித்தை போலல்லவா இருக்கிறது? நாம் பல ஆண்டுகளா கப்பட்ட பாடெல்லாம் வெட்டியாகப் போய்விடும் போலல்லவோ இருக்கிறது? நாம் எண்ணிய எண்ணம் எல்லாம் சின்னமலை ஒருவ னுல் மண்ணுய்ப் போய்விட் டது. மன்னுதி மன்னரை எல்லாம்மண்டியிட வைத்த நாம், ஒரு சாதாரண ஆளை வெல்லமுடியவில்லை என் பது வெளியில் சொல்ல வெட்கமாகவல்லவோயிருக் கிறது?

ஹார்: சின்னமலையை அவ் வாறு நினைப்பது தவறு. அவனெரு தனிப் பிறவி!

வெல்: ஆம், தனிப்பிறவிதான் இல்லையேல், கர்னல் மாக்ஸ் வெல்லைக் கொன்று அவர் தலையை ஊர்வலமாகக் கொண்டுபோய் ஊர் மக்க ளுக்குக் காட்டி நம்மை அவ மானப்படுத்தியிருக்கமுடி யுமா? சின்னமலை நம்மை எதிர்ப்பதற்காகவே பிறந் திருக்கிறுன் போலும். முதற் போரினும் அவனுக்கே வெற்றி! இரண்டாம்போரில் படைத் தலைவனை இழந் தோம். மூன்றுவது முறை ஒரு நொடியில் வெற்றி மாலை சூடினுன். என்னவோ நமக்கு நல்ல வேளை அல்ல. ...ம்! பார்க்கலாம்!



## ஒரு சொல் கேளீர்

ஆங்கிலம் அயல்நாட்டு மொழியாயிற்றே! இந்தி-நம் முடைய நாட்டு மொழி ஆயிற்றே என்கிறார்கள்.

தோட்டத்திலுள்ள தும்பி நம்மை சுற்றும் போது இராவணத்திலுள்ள கேள் கொடியுனல் என்ன என்று யாரும் கேட்கமாட்டார்கள்.

இந்தி இந்த நாட்டின் ஆட்சி மொழி என்பதை நாம் ஒப்புக்கொண்டோமானுல், அது மாநில ஆட்சிமொழியாகி, மாவட்ட ஆட்சிமொழியாகி, நமது அடுக்களை வரை புகுந்து விடும்.

பாம்பை கண்ட இடத்தில் கல்லை எடுத்து அடிக்க வேண்டும், அதைவிட்டு அது நம் வீட்டிற்குள் வரட்டும்; படுக்கைக்கு வரட்டும் என்று நினைப்போமானுல் அது நமக் குத்தான் ஆபத்து.

சட்டி தூக்கிக்கொண்டு போகின்ற பரதேசி நான் பட்டுப் பீதாம்பரத்தை விட்டுவிடுவேன் என்று சொன் னுல் அதிலே என்ன பொருத்தமில்லையோ, அதேவிதமாகத் தான் ஆங்கிலத்திற்கும் தங்களுக்கும் எந்தவிதமான தொடர்புமில்லாதவர்கள் விட்டேன் ஆங்கிலத்தை என்று பேசிக்கொண்டிருப்பதும்.

அறிஞர் அண்ணு]



# இந்தியால்

## முன்னுரை

இந்திதான் இந்தியாவின் ஆட்சிமொழி என்கிற சட்டத்தை இந்தி பேசுவோரைப் பெரும பான்மையினராகக் கொண்ட இந்திய அரசின் பாராளுமன்றம் நிறைவேற்றிவிட்டது. அதைத் தொடர்ந்து இந்தியை மறைமுகமாகவும், நேர்முகமாகவும் திணிக்கும முயறசிகள் முறையாகவும் திட்டமிட்டபடியும் நடைபெற்றவண்ணமிருக்கின்றன.

இந்தித் திணிப்பை முறியடிக்கவும், நமது தாய்மொழியாம் தமிழ் மொழியை வாய்பிளந்து விழுங்கப் பார்க்கும் இந்தி எனும் மலைப்பாம பின் வாயிலிருந்து மீட்கவும திராவிட முன்னேறறக் கழகம் அறப்போர் துவங்கி, அதைத தமிழ்ப் பெருமக்களின பேராதரவுடன் தொடர்ந்து நடத்திக் கொண்டும் வருகிறது.

இந்நிலையில்—கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட மொழிப் பிரச்சினை இது என்பதை உணராதவர்கள் சிலர், இந்தியால் தமிழ் கெடாது எனறு தொடர்ந்து பேசியும், எழுதியும மக்களின கவனத்தைத் திருப்பும வீண வேலையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தியால் தமிழ் கெடாது -- என்று ஆணித்தரமாகச் சொல்வோர் அரசியலல் கைத்தேர்ந்தவராகளாக இருக்கலாம; ராசதந்திரத்தில் நிபுணர்களாக இருக்கலாம்; உயர்பதவி வகிக்கும் தகுதி மிகுதோராக இருக்கலாம; பேசசுக்கலை வல்லுநராக இருக்கலாம்; சிறநத தொழிலதிபர்களாக இருக்கலாம; பத்திர்கைத துறையில் தன்னிகரில்லாச் சகரவர்த்திகளாக இருக்கலாம். ஆனல், அவர்கள் தமிழில் நிபுணர்களா என்றல் இல்லை.

நோயைபபறறி வைதியரிடம்தான் கேட்க வேணடுமேயன்றி; மளிகைக கடைக்காரரையா கேடபது? கூடாது! கூடாது! எவர் எநதத் துறையில் நிபுணரோ அவரே அநதத்துறைபறறி முடிவுகூற வல்லவர்.

அம்முறையில் இந்தியால் தமிழ கெடுமா, கெடாதா என்று கூறும் யோக்யதை தமிழக்கடல அறிந்த தமிழ்ப் புலவர்களுக்குத்தான் உணடே தவிர; மறறவர்கள் வேறு யாராக இருந்தாலும அவர்களுக்கு அதுஇல்லை—இல்லை—என்பதில் இரு கருதது்கள் இருப்பதறகு நியாயமில்லை.

அம்முறையில 'இந்தியால் தமிழ கெடுமா' என்பதை எடுத்துக் கூறிய மறைந்த தமிழப்பெரியார்களான மறைமலையடிகள், தரு. வ. க., நாவலர் சோமசுந்தர பாரதியார், உமாமகேசுவரம் பிள்ளை, ஆகியோர் கருத்தின முன்பே அனைவரும அறிவர். (தி.மு கழகம் அவர்களது பொன்னுரைகளை சுவரொட்டிகளமூலம் விளம்பரப்படுத்தியருகிறது.)

'இந்தியால் தமிழ் கெடாது' என்னும் புலவறிவாளர் பார்வைக்கு தமிழோடு தமிழாய்க் கலநது தமிழப் பணியாறறும் மேலும் பல நலமறிவாளரது கருதது்களை வைக்கிறோம:

# கெடாது என்கின்றனர், கனம்கள்! ஆனல்...

# தமிழ் கெடுமா?



## தமிழ் கெடும்!

பேராசிரியர் ஔவை துரைசாமி

புலவர் குழு உறுப்பினரும், மதுரைத் தமிழ் எழுத்தாளர் மன்றத் தலைவரும், மதுரைத் தியாகராயர் கல்லூரிப் பேராசிரியருமான ஔவை துரைசாமி அவர்கள் தெரிவித்த கருத்துரைகள் வருமாறு:

கேள்வி: இந்தி வந்தால் தமிழ் கெடுமா?

பதில்:

இந்தி மாத்திரமல்ல, இந்தியோ யன்றி வேறு எம் மொழி வந்தாலும் தமிழ் கெடும். வடமொழி வந்தாலும் ஆங்கிலம் வந்தாலும் எத்தனையோ சொற்கள் மக்கள் உள்ளத்தில் இடம் பெற்றன; அதனால், எத்தனையோ அழகிய தூய தமிழ்ச் சொற்கள் இறந்துபோயின. அசுன விலாவாகப் பலரிடையே தமிழால் ஆட்சி நடத்த முடியுமா? தமிழால் புகழ் கலைக்களைக் கற்பிக்க முடியுமா? என்ற ஐயங்கள் தோன்றியதை நாடு அறியும்.

கேள்வி: இந்தியால் தமிழ் அழியும் எனக் கூறுவது வைத்தியக்காரத்தனம் என்று கூறுகிறார்களே சிலர்?

பதில்:

இந்தியால் தமிழ் அழியும் என்று கூறுவது பைத்தியக்காரத்தனம் என்பது மொழியின் இயல்பு அறியாது சொல்வது. காலஞ் சென்ற மறைமலையடிகள், திருப்பாதிரிப்புலியூர் தவத்திரு. ஞானியார் அடிகள் முதலிய தமிழ்ப் பெரியார்களும் நாவலர் சோமசுந்தர பாரதியார். தமிழவேள் தி. வே. உமாமகேசுவரனார் முதலிய பல பேரறிஞர்கள் பல்லாண்டுகட்கு முன்பே இந்தி முதலிய வேற்று மொழிகளால் தமிழ் மேலே கூறிய வாறு கெடும் என்பதை வற்புறுத்தியுள்ளார்கள்.

கேள்வி: பெரிய பதவிகளில் உள்ள சிலர் இந்தியை ஆதரிக்கக் காரணம் என்ன?

பதில்:

கட்சி வெறியும் இந்தி முதலிய வேற்று மொழியை ஆதரித்தால் உலகியல் வாழ்வுக்கு ஓரளவு ஊதியமும் பதவியும் வேறு சலுகையும் பெறலாம் என்ற எண்ணமும் தான், உண்மை அறிய வொட்டாமல் உலரைத் தடுக்கிறது.



## தமிழறிந்தோர் தீர்ப்பு என்ன?

# எல்லாத் தாய் மொழியும் கெடும்!



மகாவித்வான் வேணுகோபால் பிள்ளை

தமிழகப் பலவர் குழு உறுப்பினரும், தமிழ் ஆராய்ச்சி அறிஞருமான மகாவித்துவான் - சிந்தாமணிச் செம்மல் மே. வீ. வேணுகோபால் பிள்ளை தெரிவித்த கருத்துகள்:

கேள்வி: இந்தி வந்தால் தமிழ் கெடுமா?

பதில்: இந்தி வந்தால் தமிழ் மட்டுமன்று, ஒவ்வொருவருடைய தாய்மொழியும் கெடும்.

வாழ்க்கைக்கு வருவாய் தரும் மொழியையே மாந்தர் கற்க முயல்வது கண்கூடாய்த் தெரிந்ததே. ஆங்கிலேயர் ஆட்சியில் இந்திய நாட்டிலுள்ள எம்மொழியினரும் ஆங்கிலத்தைப் பரிந்து ஓதிப் பயில்வதில் ஆர்வங்காட்டியதே அவ்வவ்வர் தாய் மொழியை அசட்டை செய்ததற்குக் காரணமாகும் என்பது அறிஞர் கண்ட உண்மை. இப்பொழுது உரிமையாட்சியில் இந்தி மொழி பயில்வர்க்கு ஏற்றம் அளிக்க முயல்வதும் அதனைப் பயில்பவர் தாய் மொழியை அசட்டை செய்து அம்மொழியிலே ஆர்வஞ் செலுத்தக் காரணமாகும் என்பதே என் கருத்து.

கேள்வி: கடவுள் போன்றது தமிழ் அதைக் காப்பாற்றுவேன் என்பது பைத்தியக் காரத்தனம் என்கிறார்களே.....?

பதில்: கடவுள் கடவுள் என்று சொல்லிவிட்டால் கடவுள் நேரில் வந்துவிடுகிறாரா? பின் ஏன் கடவுள்மேல் பக்தி செலுத்தவேண்டும்? தமிழ் 'மொழி' என்பதை மறந்து அவர்கள் பேசுவது பொருந்தாது. அவர்களுடைய அடிமைப்புத்தியால் அப்படி பேசுகிறார்கள்.

## நஞ்சுண்டால் சாவாஞ்?

போராசிரியர் இலக்குவனார்

மதுரை தியாகராயர் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி. இலக்குவனார் எம் ஏ., எம். ஓ. எல். கெரிவித்த கருத்துகள் வருமாறு:

கேள்வி; இந்தி வந்தால் தமிழ் கெடுமா?

பதில்: இந்தி ஆட்சி மொழியாகத் திணிக்கப்படுவதால் தமிழ் கெடுமா என்ற கேள்வி 'நஞ்சுண்டால் சாவாஞ்?' என்பது போன்றதாகும்.

ஆங்கிலம் ஆட்சிமொழியாக வந்ததனால் தமிழ் தாழ்ந்து கெட்டது போன்று இந்தி வந்தாலும் கெடும் என்பதில் கருத்து வேறுபாட்டுக்கு இடமே இன்று. ஆங்கிலமாவது அறிவு பெருக்கும் உலக மொழியாக விளங்குகின்றது. இந்தியால் என்ன பலனைப் பெறமுடியும்?

அன்றியும் இந்திக்குப் பயன்படும் தேவநாகரி எழுத்தையே ஏனைய மொழிகளும் பயன்படுத்தும் திட்டம் திரைமறைவில் உருவாகி வருகின்றது என்று கருத இடமுள்ளது. ஆகவே இந்தி மட்டும் இந்தியக் கூட்டரசின் ஆட்சிமொழியாவது தமிழுக்குப் பல்வகையிலும் கேடுதான் என்பதில் எட்டுணையும் ஐயமின்று.

# இந்தியால் தமிழ் கெடுமா?

கே: இந்த நேரம் பார்த்து சில ஆங்கில எதிர்ப்பியக்கம் துவக்குகிறார்களே!

ப: ஆங்கில அடிமையினின்றும் நீங்கவேண்டுமென்று கூறுகின்றவர்கள் இந்திக்கு அடிமையாவதை விரும்பி ஏற்பது ஏனே?


கே: இப்போதுள்ள சூழ் நிலைக்குத் தங்கள் மாற்றுத் திட்டம் என்ன?

ப. இப்பொழுதுள்ளசூழ்நிலையில் ஒவ்வொரு மாநிலத்தவரும் அவரவர் மொழியையும் உலக மொழியாம் ஆங்கிலத்தையும் கற்றல் இந்திய ஒற்றுமையையும், உலக ஒற்றுமையையும் நிலை நாட்டல் எளிதாகும். அந்நிலை உருவாதல் வேண்டும். தமிழும் தமிழரும் வாழ துணைபுரிவது இரு மொழித் திட்டமே யாகும்.

∴ ∴ ∴

# பலகேடுகள் வரும்!

## பெரும்புலவர்—மயிலை சீனிவேங்கடசாமி



(தமிழகப் புலவர் குழு உறுப்பினரும் தமிழில் பல வரலாற்று நூல்களை எழுதியவரும் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராக இருந்தவருமான புலவர் மயிலை சீனிவேங்கடசாமி தெரிவித்த கருத்துகள் :)

கேள்வி : இந்தி வந்தால் தமிழ் கெடுமா?

பதில் : இந்தி கட்டாயமாகவாவது அல்லது மறைமுகமாகவாவது புகுத்தப் பட்டால் தமிழ் கெடும் என்பதில் ஐயப்பாடில்லை.

சென்ற 150 ஆண்டுகளாக ஆங்கில மொழி அரசாங்க மொழியாகவிருந்து ஆதிக்கம் செலுத்திய காரணமாக தமிழின் வளர்ச்சி சில துறைகளில் கெட்டது. ஆங்கிலம் நன்கு வளர்ச்சி பெற்ற மொழியாக விருந்த படியால் ஓரளவுக்கு தமிழ் வளர்ச்சிக்கு அது உதவி புரிந்து திருந்தும்கூட வளர்ச்சி தடைபட்டது.

முழுவளர்ச்சி பெறுத பல குறைபாடுகளுடைய இந்தி மொழி தமிழ் நாட்டில் புகுத்தப்பட்டால் அதனால் தமிழுக்கு பல கேடுகள் உண்டாவது உறுதி.

கே: தமிழ் கெடாது. அதை காப்பாற்றுவேன் என்று சொல்வது தவருனது-என்கிறார்களே...

ப : தாய் மொழியைக் காப்பாற்றுவது ஒவ்வொருவருடைய கடமையாகும். தாய் மொழியைப் போற்றுதகாரணத்தாலே தென் அமெரிக்க கண்டத்திலே உள்ள பழைய தேசத்து மொழிகள் — ஸ்பானிஷ், போர்ச்சுகீஸ் முதலிய மொழிகளின் அளவுக்கு மிஞ்சிய கலப்பினால் உருமாறி ஸ்பானிஷ் மொழியாகவும் மாறி விட்டன. இந்தச் சான்றுகளினால் இந்தி கட்டாயமாகப் புகுத்தப்படுமானால் தாய் மொழி வளர்ச்சி அதிகமாக பாதிக்கப்படும் என்பது உறுதி.

மிகப்பழமையானதும் இலக்கிய வளம் பெற்றதும் திராவிட மொழிகளில் தலை சிறந்ததுமான தமிழ் மொழியின் பண்பு கெடாதபடி நம் முன்னோர்களைப் போல நாமும் போற்ற வேண்டியது மிகவும் அவசியம்.

# இந்தியால் தமிழ் கெடுமா?

# இந்தியால் தமிழ் கெடுமா?

## உயிரியல் உரிமைக்கு ஊறு!

### பன்மொழிப்புலவர் - அப்பாதுரையார்

[பன்மொழிப் புலவரும் சென்னைப் பல்கலைக்கழக தமிழ்-ஆங்கில அகராதிக்குழு ஆசிரியர்களில் ஒருவருமான கா. அப்பாதுரையார் கூறிய கருத்துகள் வருமாறு :—]

கே: இந்தி வந்தால்தமிழுக்குத் தீங்கு ஏற்படுமா?

ப : இந்தியாவுக்கு தேசியப் பொது மொழியாக மட்டுமின்றி உலகப் பொது மொழியாகவே இருக்கும் தகுதியுடையது தமிழ். ஆகவே, தமிழகத்தில் வேறு எந்த மொழி அதனுடன் போட்டியிட்டாலும் அல்லது நுழைக்கப்பட்டாலும் தமிழர்களின் உயிரியல் உரிமைக்கு அது மிகுந்த ஊறுபாடு விளைப்பதாகவே இருக்கும்.

கே : ஆண்டவனுக்கு ஒப்பான தமிழ், இந்தி வந்தால் அழியாது என்கிறீர்களே...

ப : தமிழரின் அரசியல் உரிமையற்ற நிலைமை காரணமாகவே தமிழின் தகுதி, சென்ற 2000 ஆண்டுகாலமாக படிப்படியாக தாழ்ந்து உலகின் ஏனைய 'இலக்கண வரம்பிலா மொழிபோல்' அவற்றிடையே கூட எண்ணப்படும் நிலை அடைந்துள்ளது. இந்த நிலையில் பிறமொழி புகுத்திடுவது தமிழை இன்னும் மிகுதியாக அழிவு நோக்கிக் கொண்டு செல்லும்.

---

[பச்சையப்பன் கல்லூரி தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் அ.மு. பரமசிவானந்தம் அளித்த பதில்கள் வருமாறு :

கே : இந்தி வந்தால் தமிழ் கெடுமா ?

ப : தமிழ்—தமிழ் நாட்டில் எல்லாத்துறைகளிலும் கட்டாயம் ஆக்கப் பெறுகிறவரையில் எம்மொழி வந்தாலும் தமிழ் சீர்குலையும்.

இப்பொழுதுள்ள நிலையில் ஆங்கிலத்தோடு இந்தியும் சேருமேயானல் நிச்சயம் தமிழ் கெடும்.

கே : இந்தி வந்தால் தமிழ் கெடாது என்கிறீர்களே...

ப : எல்லாத் துறையிலும் எல்லா வகையிலும் தமிழ் கட்டாயமாக்கப்பட்டால் இந்தி அல்ல, வேறு எந்த மொழி வந்தாலும் தமிழ் கெடாது.

கே : 'எல்லாம் தமிழ்' என்ற நிலைவந்த பிறகு

## சீர்குலையும்!

பேராசிரியர்—அ. மு. பரமசிவானந்தம் எம். ஏ. எம்.லிட்.

# இந்தியால் தமிழ் கெடுமா?

# கெட்டே போய்விடும்!


## முதுபெரும் புலவர்—மயிலை சிவமுத்து

['மாணவர் மன்றம்' காவல ரும் தமிழகப் புலவர் குழு உறுப்பினருமான முதுபெரும் புலவர் மயிலை சிவமுத்து தெரி வித்த கருத்துக்கள் :]

கே : இந்தி வந்தால் தமிழ் கெடுமா?

ப : ஒரு மொழியோடு மற் றொரு மொழி கலந்தால்—எவ் வளவு அதிகமாக கலக்கின் றதோ அவ்வளவு அதிகமாக பிறிதொரு மொழியின் சொற் கள் மறைந்து விடும்.

தாய்மொழியோடு வேறு ஒரு மொழியைக் கற்பார் தமக்கு மற் றொரு மொழியும் தெரியும் என் பதைப் பிறருக்கு அறிவிக்கும் முகத்தானே கலந்து பேசுவது உண்டு. மற்றும் சிலர் புதுமைக் காகவும், தாய்மொழியோடு தாம் கற்ற மற்ற மொழிகளையும் கலந்து பேசியும் எழுதியும் வரு வதுண்டு. முதலில் நம் தமிழ் மொழியில் வடமொழி இந்த இரண்டு விதமாகவும்கலந்திருந் தது. அந்தக் கலப்பு, எழுத்து—பேச்சு எல்லாவற்றிலும் கலக்க ஆரம்பித்துவிட்டது. முப்பது ஆண்டுகளுக்கு முன்பு நாம் ஒரு திருமணப் பத்திரிகையை எடுத்து படித்தோமானால் நூற் றுக்கு நாற்பது பங்கு வடமொழி கலந்திருக்கும் இவ்விதமே ஆங்கிலமொழியும் தமிழ்மொழி



வேறு எந்த மொழியும் நுழைய வழி யில்லையே...

ப: ஆமாம்... நாமாகவிரும்பி கற்பதால் கெடாது என் கிறேன்.

கே : தாய் மொழியை காப்பாற்ற போராடுவது கூடாதென் கிறீர்களே...

ப: தாய் மொழியைகாப் பாற்றுவது அந்த மக்களின் கடமை அவர்கள் போராடியே தீரவேண்டும்.

யில் வந்து கலக்க ஆரம்பித்தது.

தமிழர்கள் எதையும் முதலில் சிறிது விட்டுக் கொடுப்பார்கள். பிறகு விழித்துக் கொண்டால் அவர்களே ஏமாற்ற எவராலும் இயலாது. தமிழில்வந்து கலந்த வடமொழியும், ஆங்கிலமும் இப் போது அறவே நீக்கப்பெற்று பெரும்பாலும் தூய தமிழில் தினத்தாள் உட்பட யாவும் அமைத்து வருதலே நாம் கண் கூடாகக் காணலாம்.

இந்தி வந்தால் தமிழ் கெடுமா என்பதற்கு இந்த இரண்டு மொழிகளிலுமே தமிழ் முன்பு பேச்சிலும் எழுத்திலும் முற்றி லும் மாறி தமிழ்ப்பெரியார் திரு. வி. க. போன்றவர்கள் தமிழன் னைக்கு ஏற்பட்ட ஊழினை நினைந்து நினைந்து வருந்தும் படி நேர்ந்தது போன்றே இந்தி யாலும் தமிழ் தன்னுடைய இனிமையிலிருந்து இலக்கண அமைதியிலிருந்தும் கெட்டே போய் விடும்.

கே : இந்தியைக் கற்ப தால் தமிழ்கெடாது என்று அமைச்சர்கள் கூறுகிறார் களே...

ப: ஆங்கிலமொழியையும் வட மொழியையும் கற்றே தீரவேண் டும் என்றுஎவரும் எந்தக்காலத் திலும் வற்புறுத்தியதே இல்லை. அவ்விதமிருந்தும் தமிழில் அவையிரண்டும் புகுந்து தமி ழின் இயற்கையை பெரிதும் கெடுக்க முயன்றன. இப்போது அரசாங்கத்தார் இந்தியை கட் டாயப்படுத்துகின்றனர். இதை தமிழர்கள் விட்டு வைத்தார்கள் என்றால் பெருந்தீங்கே ஏற் படும்.

இப்போது சங்க நூல்க ளில் ஒன்றுகிய திருக்குறளைக் கூட பொதுமக்களால் எளிதில் புரிந்துகொள்ள முடிகின்றது. ஆனால் கட்டாய இந்தி வந்தால் நம்முடைய பாரதியாரின் தமி ழையேநம்மால் புரிந்துகொள்ள முடியாதபடியாகி விடும்.

கே : இந்தியை ஓர் அர சியல் கட்சி மட்டும் எதிர்க் கிறது. மக்கள் எதிர்க்க வில்லை என்கிறார்களே...

ப : இந்த இந்தியை எதிர்க்க அந்த ஒருகட்சிதான் முன் வந்திருக்கிறது. பொதுமக்களோ வரும் இந்தி மொழியை பெரும் பாலும் ஆதரிக்கின்றனர்என்று சிலர் தவருகப் பேசி வருகின்ற னர்.

ஆளுங்கட்சிக்கு எதிராகவுள்ள ஒருபெரியகட்சி இந்தக்கட்டாய மொழியைஎதிர்க்கும் ஒருசிறந்த பணியினை மேற்கொண்டிருப்ப தால் மற்றவர்கள் அதன் முடி வை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கட்சியின் முயற்சியை ஆட்சி யாளர்கள் அறவே அடக்க முற் படுவார்களேயானால் அதைத் தொடர்ந்து நடத்த ஆயிரக் கணக்கானவர் தயாராகவுள் ளார்கள். ஆனால், அவர்கள் நடத் தும் முறைக்கும் பொதுமக்கள் நடத்தும் முறைக்கும் சிறிது வேறுபாடு இருக்கலாம் என்ற லும் எதிர்ப்பு இதைவிட மிக கடுமையாக இருக்குமென்று எனக்கு தோன்றுகிறது.


# மற்றொரு மணிப்பிரவாளம் வரும்!

பேராசிரியர்—**ஆலாலசுந்தரனார்** எம். ஏ.

[தாம்பரம் கிறிஸ்தவக் கல் லூரி தமிழ்த் துறைத்தலைவர் பேராசிரியர் பூ. ஆலால சுந்தரனார் எம். ஏ. கூறிய கருத்துக்கள் :]

கே : இந்தி வந்தால் தமிழ் கெடுமா?

ப : ஆங்கில மொழி இந்தியா வின் ஆட்சி மொழியாகவிருந்த போது தமிழ் மொழிக்கு அதற் குரிய இடமளிக்கப்படவில்லை. எடுத்துக் காட்டாக உயர் நிலைப்பள்ளி பாடப் பகுதிகளி லும் கல்லூரி வகுப்புக்குரிய பாடப்பகுதிகளிலும் தமிழ் மொழிக்கு முதலிடமளிக்கப்பட வில்லை. தமிழ் மொழி நமக்குத் தாய் மொழியாக விருந்தும் அது இரண்டாவது மொழியா கவே வழங்கப்பட்டது. தமிழாசி ரியர் களுடைய நிலையை ஆங் கில ஆசிரியர்களுடைய நிலை யோடு ஒப்பிடும்போது தமிழாசி



ரியர் நிலை பெரிதும் தாழ்ந்திருந் தது என்பதைத் தமிழ்நாடு நன்கறியும். தமிழர்களுள் பலர் ஆங்கிலத்தில் பேசுவதுதான் பெருமை என்றும் தாய்மொழி யான தமிழில்பேசுவது சிறுமை என்றும் கருதிய காலம் உண்டு.

ஆங்கில மொழி வளப்பமிக்க தாதலின் ஆங்கிலேயர் தொடர் பால் தமிழ் மொழி மறுமலர்ச்சி பெற்றது உண்மையே. எடுத் துக் காட்டாக சிறுகதை, புதி

# பெருந்துன்பம், பிற்போக்கு!

## உருதுமொழியறிஞர் - தாவூத்ஷா



[உருது மொழியில் புலமையுடையவரும், 'திருக்குரானை' தமிழில் மொழிபெயர்த்துள்ளவரும், இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணனிடம் 'தத்துவம்' பயின்றவரும், தமிழ் எழுத்தாளர் சங்கத்தால் இவ்வாண்டு 'கேடயம்' அளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டவருமான தமிழ நிஞர் தாவூத்ஷா சொல்லிய கருத்துகள் :-]

கே : இந்தி வந்தால் தமிழ் கெடுமா?

ப : இந்தி வந்தால் தமிழ் நிச்சயமாகக் கெடும். இந்தி இக்கால உலகுக்கு ஏற்ற மொழி அன்று. உலகம் போகிற வேகத்தில் எல்லாவற்றையும் இந்தியால் வெளிப்படுத்த முடியாது.

கே : காந்தியார் விரும்பிய இந்தியால் தீங்கு ஏதும் வீளையாது என்கிறீர்களே . . .

ப : எனக்கு தெரிந்த வரையில் ஷாஜஹான் சக்ரவர்த்திக்கு பிறகுதான், சற்றேரக்குறைய நானூறு ஆண்டுகளுக்குள் தான் இந்துஸ்தானி என்னும் மொழி தலைதூக்கிற்று. பேச்சு வழக்கிலாகிலும் அந்த இந்துஸ்தானியை உபயோகித்துக் கொள்ளலாம் என்று காந்தியடிகள் சொல்லி சென்றார். இப்பொழுது இந்திக்காரர்கள் அவர் சொன்ன கருத்தை விட்டுவிட்டு எங்கோ போய்விட்டார்கள். இந்தி வந்தால் உலக விவகாரங்களிலும் அரசாங்க அலுவல்களிலும் இந்திக்காரர்கள் வெகுதூரம் தமிழர்களை விட்டு முந்திவிடுவார்கள். நம் தமிழர்கள் பெருந்துன்பத்திற்காளாகி பிற்போக்கில் இருப்பார்கள்.

கே : பல மொழிகளைக் கற்பது பயனுடையது. எனவே இந்திக் கற்பதில் தீங்கு விளையாது என்கிறீர்களே?

ப : பல மொழிகளை கற்பது நல்லதுதான் என்று அந்தக் கட்சிக்காரர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் எல்லோருமே இரண்டு மூன்று நான்கு மொழிகளை கற்றுக் கொள்ளுவது இயலாது.

தமிழ் முன்னேற வேண்டும், தமிழில் எல்லாம் நிரம்ப பெற வேண்டும் என்று உண்மையிலேயே கருதுகிறவர்கள் பயனற்ற பிறமொழிகளை கற்பதில் தங்களுடைய மூளையையும் முயற்சியையும்வீண்போக்க மாட்டார்கள். காலஞ்சென்ற டாக்டர் உ. வே. சாமிநாத அய்யர் அவர்கள் தமிழுடன் கூட இந்தி போன்ற மொழிகளை கற்பதாயிருந்தால் அவர் தமிழில் இத்துணைப் பெரியவராக வந்திருக்க முடியாது. அவருடைய ஆசிரியர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் தமிழ் கற்கும்போது வேறு ஒன்றிலும் கவனம் செலுத்தக் கூடாது என்றும் சங்கீதம் கூட கற்றுக்கொள்ளக் கூடாது என்றும் சொல்லியதாக டாக்டர் உ. வே. சா. என்னிடம் கூறியுள்ளார்கள். எனவே தமிழ் மொழி வளர்ச்சிக்கு 'பலப்பட்டறை' மொழிகளை கற்று காலத்தையும் மூளையையும் வீணுக்கிக்கொள்வதைவிட தமிழுக்காகவே பாடுபட்டால் நம்முடைய தாய் மொழியை இன்னும் நன்றாகவே வளர்த்துக்கொள்ளலாம்.

---

னம், நாடகம், அகராதி, ஆராய்ச்சித் திறன் முதலிய துறைகளில் ஆங்கில மொழியைப் பின்பற்றித் தமிழ் மொழி மறுமலர்ச்சியினை பெற்றது. ஆனால் ஆங்கிலேயர்களின் ஆட்சியால் தமிழ் மொழி அதற்குரிய இடத்தினைப் பெறவில்லை. ஆங்கில ஆதிக்கமே எங்கும் நிலை பெற்று நிலவியது. அதைப் போல இந்தி மொழியும் ஆங்கில மொழியின் இடத்தைப் பெறுமாகில் தமிழ் மொழியின் நிலை கட்டாயம் பாதிக்கப்படும் என்பதில் ஐயப்பாடில்லை.

கே : இந்தி வந்தால் தனித்தமிழ் நடை அழியும் என்பது உறுதிதானே?

ப : ஆங்கில மொழி ஆட்சி மொழியாக விருந்த போது தமிழர்களுள் பலர் ஆங்கிலமும் தமிழும் கலந்த மணிப்பிரவாள நடையில் பேசியும் எழுதியும் வந்தனர். இந்தி மொழி ஆட்சி மொழியாக வருமாகில் இந்தியும் தமிழும் கலந்த மற்றொரு மணிப்பிரவாள நடை எழுத்திலும்,பேச்சிலும் தோன்றக் கூடும். தனித்தமிழ் நடை வரவை தேய்த்து மங்கிவிடும். ∴

# இந்தியால் தமிழ் கெடுமா?

# வாழ்வு குன்றும்!

பிரெஞ்சு—ஸ்பானிஷ் மொழியறிஞர்

**மேரி மாசிலாமணி அம்மையார்**



[தமிழகப் புலவர் குழுவில் உள்ள ஒரே பெண்பாற்புலவரும், பிரெஞ்சு, ஸ்பானிஷ் மொழி புலமையுடையவரும் சென்னை மகளிர் கிறிஸ்துவக் கல்லூரி தமிழ்த்துறைத் தலைவரும் அமெரிக்கா, சுவிட்சர்லாந்து, ஜெர்மனி, ஸ்காட்லாந்து, கனடா ஆகிய நாடுகளுக்கு கல்விப்பணிக்காகச் சென்று வந்தவருமான பேராசிரியை மேரி மாசிலாமணி அம்மையார் கூறிய கருத்து:]

கே: இந்தி வந்தால் தமிழ் கெடுமா?

ப: ஒரு மொழி ஆட்சிமொழியானால் மக்கள் வாழ்க்கையில் வளம்பெறுவதற்கும், செல்வம் திரட்டுவதற்கும் அந்த மொழியை கற்றுஅதிலேயே தேர்ச்சி பெற விரும்புவார்கள். தாய் மொழியை புறக்கணிப்பார்கள். எனவே, வேறு ஒரு மொழி ஆட்சிமொழியாவதால் தமிழின் வளர்ச்சியும் வாழ்வும் குன்றுமென்பதில் ஐயமில்லை.

---




**பாலசுப்பிரமணியம்** எம். ஏ. எம். லிட்.

[தென்மொழி புத்தகடிரஸ்டு தமிழ்த்துறை பதிப்பாசிரியரும் தமிழ் எழுத்தாளர் சங்கப் பொதுச் செயலாளரும் 'அணுக்கதிர்' ஆசிரியருமான பா. பாலசுப்பிரமணியன் எம்.

# இந்தியால் தமிழ் கெடுமா?

## அழிவே தவிர ஆக்கமில்லை!

பேராசிரியர்—மா. ரா. மாணிக்கம் எம். ஏ.

[சென்னை தியாகராயர் கல்லூரித் தமிழ்த்துறைத்தலைவர் பேராசிரியர் ம. ரா. மாணிக்கம் எம்.ஏ. தெரிவித்த கருத்துக்கள்:]

கே: இந்தி வந்தால் தமிழ் கெடுமா?

ப: ஒரு மொழி மற்றொரு மொழி வழங்குகிற நாட்டில் பரவத் தலைப்படுமானால் அந்த வட்டாரத் தாய் மொழிக்கு நன்மையும் தீமையும் ஏற்படுவதுண்டு. ஆங்கிலம் நம்நாட்டில்



பரவியதால் அதனால் வரக்கூடிய தீமை சிறிதும் நன்மை பெரிதுமாக கிடைத்தது. இந்திமொழியை பொறுத்தளவு தமிழ்மக்கள் பெறுகின்ற அளவு அதனிடத்தில் ஒன்றுமில்லை. ஆகவே இந்தி பரவுமானால் தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் வருவது அழிவே தவிர ஆக்கமில்லை.

கே: 'ஆண்டவன்போன்றது தமிழ். அதைக் காப்பாற்றுவேன் என்றுசொல்வது பைத்தியக்காரத்தனம் என்கிறார்களே...

ப: மக்களிடையே உள்ள

(32-ம் பக்கம் பார்க்க)

---

ஏ., எம் லிட் கூறிய கருத்துகள்]

கே: இந்தியால் தமிழ் கெடுமா?

பண்டுதொட்டு இன்றுவரை வடமொழிகளின் ஆதிக்கங்களால் தமிழும் தமிழ்நாடும் சீர் குலைந்து கொண்டே வந்துள்ளன. இந்தியால் தமிழ்கெட்டே போகும்.


கே: இந்தியை எதிர்ப்பது தவறு என்கிறார்களே அதிகாரத்திலுள்ளவர்கள்?

ப: பலமொழிகளின் ஆதிக்கங்களால்கெட்டது போதாதா? அதுவும் எத்தகைய தகுதியுமில்லாத இந்திக்கு அடிமைப்படவா வேண்டும்? தன்மானமுள்ள தமிழர்கள் விழித்தெழுந்து வெள்ளம் வரும் முன்னே அணை போடுவதுதான் அறிவுடமை.

கே: தமிழைக் காப்பாற்றுவேன் என்பது 'பைத்தியக்காரத்தனம்' என்கிறார்களே...

ப: தமிழ் தெய்வம் போன்றது. அதை காப்பாற்ற முயற்சிப்பது பைத்தியக்காரத்தனம் என்று சொல்லுகிறார்கள் சிலர். அவர்கள் தெய்வங்களை காப்பாற்றுவதற்கே இந்து மத அற நிலைய பாதுகாப்புத்துறை என்ற ஒரு துறையை வைத்து நிருவகித்து வருகிறார்கள். தெய்வத்திற்கே இவ்வளவு பாதுகாப்புத் தேவை என்றால் தமிழுக்கு பாதுகாப்பு நிச்சயம் தேவை. ∴

# என்ன ஐயம்?



பேராசிரியர் **அ. கி. பரந்தாமனர்** எம். ஏ.

[தமிழகப்புலவர்குழு உறுப்பினரும் மதுரை தியாகராயர் கல்லூரி பேராசிரியருமான அ. கி. பரந்தாமனர் எம்.ஏ. அவர்கள் தந்துள்ள கருத்துரைகள் வருமாறு :]

கே : இந்தி வந்தால் தமிழ் கெடுமா?

ப : இந்தி வந்தால் தமிழ்கெடும் என்பதில் ஐயமில்லை. வட மொழி தமிழகத்தில் பரவத் தொடங்கியதும் தமிழ் கெட்டது. பல வட சொற்கள் தமிழில் புகுந்தன. தமிழும் வடசொல்லும் கலந்த மணிப் பிரவாள நடையே வந்துவிட்டது. சமணர்களும் வைணவர்களும் இம்மணிப் பிரவாள நடையில் நூல்களும் உரைகளும் எழுதினர்கள். அருணகிரிநாதரும், வில்லிப்புத்தூராரும் முறையே வட சொற்கள் கலந்து திருப்புகழையும் பாரதத்தையும் இயற்றினர்கள். நன்கு படித்தவர்களும் இவற்றை இன்று கற்க முடியாதவர்களாயிருக்கிறார்கள். விஜயநகர நாயக்கர் ஆட்சி தமிழகத்தில் ஏற்பட்டதும் தமிழ் கெட்டது. பல தெலுங்குச் சொற்கள் தமிழில் புகுந்தன. முஸ்லிம் ஆட்சி தமிழகத்தில் ஏற்பட்டதும், 400—உருதுச் சொற்கள் தமிழில் நுழைந்தன. ஆங்கில ஆட்சியில் ஆயிரக் கணக்கான ஆங்கிலச் சொற்கள் தமிழில் நுழைந்து தூய தமிழைக் கெடுத்துள்ளன. ஆதலால், இந்தி வந்தால் தமிழ் கெடும் என்பதில் என்ன ஐயம்?

கே : இந்தியால் தமிழ் அழியும் என்று சொல்வது பைத்தியக்காரத்தனம் என்கிறார்களே அது பற்றித் தங்கள் கருத்து என்ன?

ப : ஒரு நாட்டில் இரு மொழிகள் வழங்கும் போது ஒரு மொழி ஆதரவும், செல்வாக்கும் பெற்று விட்டால், மற்றொரு மொழி எவ்வளவு சிறந்த இலக்கிய முள்ளதாயினும் நாளடைவில் அழியத்தான் தொடங்கும். இங்கிலாந்தில் கெல்ட்ட மொழி இருந்த இடத்தில் ஆங்கிலம் விழுந்ததும் கெல்ட் மொழி மறைந்ததாம். அயர்லாந்தில் ஆங்கில ஆட்சி நிலவிய காலத்தில் ஆங்கிலம் செல்வாக்குப் பெறத் தொடங்கியது. ஆனல் கிரிபத் போன்ற அறிஞர் ஆங்கிலத்தை எதிர்த்து நின்று போராடி ஐரிஷ் மொழியை வளர்க்க அம் மொழி வளரலாயிற்று. தமிழ் நாட்டில் ஆங்கிலம் செல்வாக்குப் பெற்றிருந்த நூறு ஆண்டுகளில் தமிழ் வீழ்ச்சியுற்றது. தமிழ் மக்களின் தமிழ்த் தொண்டால், திரு.வி.க. போன்றவர்கள் செய்த தொண்டால், தமிழ் மொழி உயிர் பெற்று வளரத் தொடங்கியது. சில அலுவல்களில் இந்திப் படிப்பு தேவை என்று இன்று விளம்பரம் வருகிறது. இப்படியே வந்து கொண்டிருந்தால் தமிழ் செல்வாக்கு அற்று அழியத் தானே தொடங்கும்? இந்நிலையை உணர்ந்து சொல்வது பைத்தியக்காரத்தனமா?

பேராசிரியர்
அன்புகணபதி
கருத்துரை
55-ம் பக்கம்

பேட்டி :
மாமூலன்

31-ம் பக்கத் தொடர்ச்சி.....

கடவுள் பற்றை வைத்துக் கொண்டு அவர்களே ஏமாற்றப் பேசப்படும் பேச்சே தவிர, இதில் எள்ளவும் உண்மையில்லை.

இன்று தமிழைப் பாதுகாக்க பல கழகங்கள் தோன்றியுள்ளன. இவை தோன்றுமலிருந்தால் இந்த அளவுக்கு சிறப்புடன் இருக்க முடியாது. தமிழ் நாட்டில் தமிழை பாதுகாக்கக் கூடிய சூழ்நிலை தோன்றுதொட்டே இருந்து வருகிறது.

# இந்தியால் தமிழ் கெடுமா?



# குற்றமும் தண்டனையும்

எத்தனையோ கதைகளை நீங்கள் கேட்டிருப்பீர்கள். ஆனால், குற்றமும் தண்டனையும் பிறந்த கதையை இந்தத் தடவை கேளுங்கள்.

சமூகம் என்ற அமைப்பு உருப்பெறுத காலம். —மனித இனம் தனித்தனியாக அலைந்து கொண்டிருந்த வேளை— அப்போது மனிதனை ஆட்டுவித்த அடிப்படை சக்தி சுயநலம். தான் உண்ணவேண்டும் தான் உறங்க இடம் வேண்டும். தன் உடல் குளிரால் வாடாமல் போர்த்த ஆடை வேண்டும்-என்ற சுயநல வேட்கையோடு எதையும் அதற்காக செய்ய தயாராக இருந்தான். முத்தனை சித்தன் தாக்கினால், முத்தன் திருப்பித் தாக்கினான். கந்தன் உடமையை, கடம்பன் பறித்தால், கடம்பனை, கந்தனே எதிர்த்துப் போராடினான். முத்தன் வழக்கிற்கு முத்தனே நீதிபதி. கந்தன் வழக்கில், கந்தனே தண்டனை தந்து, அதை நிறைவேற்றும அதிகாரி. இப்படி பலாத்காரம்தான் உரிமையை நிர்ணயிக்கும் கருவியாக இருந்தது. தனிப்பட்ட பழிவாங்கும் உணர்ச்சியும், தன்னுடமையைக் காக்கும் வெறியுணர்ச்சியும்தான் எங்கும் நிலவின. நீதி என்பது, பலத்தைப் பொறுத்ததாகி விட்டது.

தனி மனிதர்கள் ஒன்று கூட ஆரம்பித்தார்கள். சமூகம் பிறந்தது. அதில் நல்லது-கெட்டது என்ற நடவடிக்கைகளை வகைப்படுத்தினர்கள். கெட்டது செய்பவனை தடுத்திட சமூகத்திற்கு அதிகாரம் தந்தார்கள். குற்றம் என்பது சமூக விதிகளை மீறுவது, என்றார்கள். நீதி, என்றால் ஒவ்வொருவருக்கும் உரியதை வழங்குவது என்றார்கள். நீதி பரிபாலிக்கும் உரிமையை, சமூகம் எடுத்துக் கொண்டது. அதன் பிறகுதான் சமூக வளர்ச்சி, முன்னேற்றம் ஏற்பட்டது.

குற்றம் என்பது நாட்டுக்கு நாடு, காலத்திற்கு காலம் வேறுபட்டு வந்துள்ளது. ஆனால் சில, எந்த நாட்டிற்கும் எந்த காலத்திற்கும் பொதுவானவையாக இருந்து வருகின்றன. உதாரணமாக, குடிப்பது குற்றம், நம்நாட்டில் இப்போது. இதுவே, குற்றமில்லை என்று இருந்தது முன்பு. ஆனால் மேலை நாட்டில் குடிப்பது குற்றமில்லை. ஆனால், கொலை புரிவது எப்போதும் எந்நாட்டிலும் குற்றம். அது போலவே நீதியும், மாறி மாறி வந்திருக்கிறது.

சமூக அமைப்பில், நீதி பரிபாலனம் (Administration of Justice) மிக அடிப்படையான அம்சமாகும். நீதி சரியான வகையிலும், உரிய முறையிலும், நேரத்திலும் பரிபாலிக்கப் படாவிட்டால் சமூகம் கட்டுக் குலைந்துவிடும். தனி மனித வெறியாட்டம் தலைதூக்கிவிடும். இதனை உணர்ந்துதான் சமூகம், தன் முதற் கடமையாக குற்றங்களைத் தொகுத்தது. அதனைக் கண்டுபிடிக்க படை அமைத்தது. அதற்கு விசாரணை புரிந்து நீதி வழங்க ஒரு அமைப்பை ஏற்படுத்திற்று. அதற்கு சகல சக்திகளையும் ஊட்டிவிட்டது.

"நீதி ஒவ்வொரு மனிதனுக்கும், அவனுக்கு உரிமையானதை வழங்குவது" என்றார் சாலமன்ட் எனும் பேராசிரியர். "நீதி, ஒவ்வொரு மனிதனுக்கும், அவனுக்கு உரியதை வழங்க விழைவது" என்றார் ஜஸ்டினியன் என்பார்.

சமூகத்தில் நீதி நிலைக்க வேண்டுமானால், சமூகத்தை நிர்வகிப்போரிடம் வலிமையும் உரிமையும் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் சமூகத்தின் மொத்தத் தன்மை உருக்குலைந்துவிடும். சமூக முன்னேற்றமே இந்த நீதி நிர்வாக முறையிலேதான் அடங்கியிருக்கிறது. தனி மனித பலாத்காரத்திலிருந்து, கட்டுப்பாடான சமூக சக்திக்கு மதிப்பேற்பட்டு, அதன்மூலம் குற்றமிழைப்போருக்குத் தண்டனை வழங்கவும், குறையேற்பட்டவருக்கு நிறை செய்யவும் ஆன நிலைமைதான் நாகரீக வளர்ச்சியாகிவிட்டது.

இந்த நீதி நிர்வாகத்தில் சிவில், கிரிமினல், என்ற இரு பிரிவிற்குள் கிரிமினல் பிரிவு பற்றிய கதையை மட்டுமே விரிவாக விளக்க முயல்கிறேன். கேளுங்கள்:

மனித சமுதாயத்தின் நீண்ட நாள் கவனம், குற்றமும் தண்டனையும்பற்றியதாகவே இருந்து வந்திருக்கிறது. சமூக வளர்ச்சியின் அறிகுறி, இந்த பரிகார நீதி முறைதான். குற்றம் என்கிறார்களே, அந்த சொல்லின் பொருள் என்ன? சமூகம் விதிக்கும் முறைகளுக்கு எதிரிடையான காரியத்தைச் செய்வது. ஒரு குற்றம் என்பது நான்கு வகையான நிலைமைகளையொட்டி உருப்பெறுகிறது. குற்றம் இழைப்பவரின் நோக்கம் (Intention) தயாரிப்பு (Preparation) முயற்சி (Attempt) முடிவு (Completion of the Act) என்று படிப்படியாக வளர்கிறது கிரிமினல் குற்றங்களில் மிக முக்கியமானது குற்றமனம் (Mensrea) ஆகும். இது மிக அடிப்படையானது. இந்தக் குற்றங்கள், இயற்கை நிலையில் சில ஏற்படுகின்றன. சில சட்டங்கள்மூலம் சில குற்றங்களை, உருவாக்குகிறார்கள்.

குற்றம் இழைக்கப்படுகிறது. சமூகம் இதனைத் தடுக்க வேண்டும். அதன் கையில் கொடுக்கப்பட்டுள்ள ஆயுதம் தண்டனைதான். இந்த தண்டனை முறையிலும், நான்கு வகையான தத்துவங்கள் உள்ளன. அவை யாவை? குற்றம் புரிவோர் அஞ்சவும், அதனைக் காண்போர் ஒடுங்கி நல்வழிப்படவும் தக்க வகையில் தரும் அதிக தண்டனை ஒரு வகை. இதனை அச்சுறுத்தும் முறை— Deterent Theory — என்பர். அடுத்தது குற்றம் புரிவோர் மீண்டும் குற்றம் புரியாமலேயே செய்துவிடுவது. அதாவது குற்றவாளியையே அழித்துவிடுவது. மரண தண்டனை, நாடுகடத்தல் போன்றவை. இதனை தடுப்பு முறை — (Prevention Theory)—என்பர்.

தண்டனைத் தத்துவத்தில் இன்னொருவகை இருக்கிறது. அதாவது செய்த குற்றத்தால் பாதிக்கப்பட்டவன் அனுபவித்ததைப் போல், செய்தவன் அனுபவிக்க வேண்டியது. இது பழிவாங்கும் உணர்ச்சியின் அடிப்படையில் அமைந்தது. இது பழிவாங்கும் முறை-Retributive Theory என வகைப்படுத்துவர். அதாவது 'உயிருக்கு உயிர், கண்ணுக்கு கண், பல்லுக்கு பல், கைக்கு கை, காலுக்கு கால் வாங்குவது' என்பதாகும். இது காட்டுமிராண்டி தத்துவமாகும்.

தண்டனை என்பதே ஒரு தவறான காரியம். அது, நன்மை அடைவதற்கு வழியாக அமைவதின் மூலமே அனுமதிக்கப்படலாம். பழி வாங்கல், குற்றத்திற்கு மாற்ப் ஆகாது. அதனை அதிகப்படுத்தும் தண்டனை முடிவல்ல. சமூக நலத்தை தேடித்தரும் வழியாகும். ஆகவே, இந்த தண்டனைத் தத்துவம் தக்கார் எவராலும் ஏற்றுக்கொள்ள இயலாதது. அடுத்தது சீர் திருத்த முறை- Reformative Theory-என்பதாகும். தண்டனை, பழி வாங்க அல்ல; பழி துடைக்க என்பதே இதன் கருத்தாகும். குற்றவாளிகளைத் திருத்தி குணவானாக ஆக்குவதாகும்.

குற்றம் என்பதும் ஒரு நோய்தான், குற்றவாளி, ஒரு நோயாளியே! நோய்க்குரிய காரணத்தைக் கண்டு நோய் தீர்க்க வேண்டும். சாலமன்ட் இந்தமுறையைக் குறையுடையது என்கிறார். இந்த முறையால் சிறைச்சாலை, குடியிருப்பிடங்களாக மாறிவிடும். குற்றம் புரியும் குணம் என்பது சிலரிடம் இயற்கையிலேயே படிந்து விடுகிறது. இதனை மாற்ற முடியாது என்கிறார் அவர். ஆகவே, அச்சுறுத்தும் தத்துவத்திற்கும், சீர்திருத்தத் தத்துவத்திற்கும் இடைப்பட்ட நிலையில் தண்டனை முறை அமையவேண்டும் எனக் கூறுகின்றனர், இத்துறையில் வல்லுநர். இத்தாலியில், இரும்புக்கதவுகளில்லாத சிறை முறை இருக்கிறது. உலக உத்தமர் காந்தி, 'பாவத்தை பெறு-பாவம் புரிந்தவனை மன்னித்துவிடு' என்ற அடிப்படையில் தான் தண்டனை முறை அமையவேண்டும் என்கிறார்.

'குற்றமும், தண்டனையும்' என்ற இந்தப் பொதுக்கதையை ஏன் கூறினேன் தெரியுமா? இன்று கழகத்தாரோடு சட்டத்தை வைத்துக்கொண்டு சமர் புரியும் ஆளவந்தாரின் நிலைக் கதையுடன் ஒட்டிக் காட்டுவதற்குத்தான்.

கழகம் ஆரம்பித்து நடத்தும் இந்தி எதிர்ப்பு 'அறப்போர்' இருகூறுனது. ஒன்று, இந்திய அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவை எரித்து, அதன் மூலம் ஆட்சியாளரின் மொழிக் கொள்கை தவறுடையது, அரசியல் பிரிவை மாற்றி அமைத்திட வேண்டும் என்று எடுத்துக் காட்டவும், எதிர்ப்பைத் தெரிவிக்கவுமான நடவடிக்கை. மற்றொன்று, மத்திய சர்க்கார் அலுவலகங்களின் முன் மறியல்.

'குற்றமும், தண்டனையும்' என்ற பொதுக் கதை கூறுவது, குற்றம் நிகழாமல் தடுப்பதுதான் தண்டனையின் நோக்கமாகும். ஆனல், நடைமுறை, தண்டனை தருவதற்காக, குற்றம் நிகழ்வதை, குற்றத் தடுப்பு படையினர் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். தத்துவம் தடுமாறுகிறது. முறை பிறழ்கிறது.

குற்றம், என்பதற்கு, குற்ற மனம், முக்கியம் என்கிறது பொதுவிதி. இங்கு, அது தேவையில்லை என்றாகி விட்டது.

சென்னை 1957-ம் ஆண்டு 24-வது சட்டம், தேசிய அவமதிப்புத் தடுப்புச் சட்டம், தேசிய கௌரவத்திற்கு அவமதிப்பு ஏற்படுத்தும் எந்த நிகழ்ச்சியையும் தடுத்திட வழி செய்கிறது. அவமதிப்பு நிகழ்ச்சிகளில் ஒன்று, அரசியல் சட்டத்தைக் கொளுத்துவது ஆகும் என்கிறது சட்டம்.

கொளுத்துவதே குற்றம் என்கிறது சட்டம். ஆனல், கொளுத்துவோர் மனம், குற்ற மனமா, என்று அக்கரை காட்டவில்லை.

சட்டத்தின் தலைப்பு, தேசிய கௌரவத்திற்கு, ஏற்படும் புண்படுத்தும் இழிசெயல்களை தடுத்து நிறுத்துவது—அதாவது Prevention of Insults என்கிறது. ஆனல், எதிர்ப்புணர்ச்சியைக் காட்ட கொளுத்துவது என்பது இதனடிப்படையில் வராது. தலைப்பு, Prevention of protests என்று கூறவில்லை. இது மிகவும் எண்ணிப்பார்க்க வேண்டிய கருத்தாகும்.

'Insult' என்ற பதத்திற்கும் 'Protest' என்ற பதத்திற்கும் உள்ள வேறுபாடுகள் கவனிக்கத்தக்கதாகும்.

இந்த வகையில், குற்றமில்லாக் குற்றத்திற்கு, தண்டனை தரவேண்டும் என்பதற்காக தண்டனை தரப்படுகிறது. நீதித் துறையில் பணியாற்றும் அனைவரும் சிந்திக்க வேண்டுகிறேன்.

இந்தக் கதையின் முடிவு, இன்று நம் நாட்டில், ஒன்றை குற்றம் என்று சொல்கிறார்கள். அப்படிச் சொல்வதில் குற்றம் இருக்கிறது என நான் சொல்கிறேன். இந்த குற்றத்தின் குற்றத்தை நீங்கள் திருத்திட முயல வேண்டும்.

குற்றம் என்று ஒன்றை சொல்லி விட்டால் மட்டும் போதாது. குற்றம் ஏன் செய்யப்படுகிறது என்பதைக் கண்டு அதற்குத் தண்டனை தர வேண்டும் இதனை பேராசிரியர் தெவான் என்பார், குற்ற சரித்திரத்தில் நாம் சிந்திக்க வேண்டியது, 'குற்றம் என் மனிதன் செய்கிறான், அவன் அப்படி செய்யாமல் இருக்கச் செய்வது என்னவழி என்பவை பற்றியாகும்' என்றார் — There is only one principle in penology which is worth any consideration it is to findout why a man does wrong and make it nor worth his while

★

## ஒரு சொல் கேளீர்

இந்தி எங்களுக்கு எடுப்புச் சாப்பாடு! ஆங்கிலம் எங்களுக்கு — நாங்கள் சொல்கின்ற முறைப்படி சமையல் செய்து போடுகின்ற சமையல்காரன்!

தமிழ்—எங்களுடைய மனை அறிந்து—எங்களுடைய மனமறிந்து — எங்கள் இனனறிந்து—உணர்வறிந்து — எங்கள் இனை—உயிரை வளர்க்கின்ற தாய். அப்படித் தாயின் கரத்தாலே எங்களுக்கு உணவு கிடைக்கும் என்ற உத்திரவாதம் கிடைத்துவிட்டால் — எங்களுக்கு எடுப்புச் சாப்பாடும் வேண்டாம்—ஆங்கில முறை உணவும் வேண்டாம்.

—அறிஞர் அண்ணா

தமிழகத்தின் மொழிப் பிரச்சினை இந்திய அரசியல் பிரச்சினைகளுடன் பின்னிக் கலந்து மிகவும் சிக்கலாகியுள்ளது. ஆனால், அரசியல் பிரச்சினைகளுடன் சேராத நிலையில்கூட, அதன் சிக்கல் குறைந்துவிடாது. ஏனெனில் மற்ற நாடுகளின் மொழிப்பிரச்சினைகளுக்கோ, நாட்டுப்பிரச்சினைகளுக்கோ இல்லாத ஒரு தனித் தன்மை அதற்கு உண்டு. தமிழரின் மொழிப்பிரச்

# உலகமொழிச் சிக்கல்!

பன்மொழிப்புலவர்
கா. அப்பாதுரையார்

JAYA

சினையை வெளியுலகத்தார் சரியாக அறிந்து கொள்ளாத தில் வியப்பில்லை. ஏனெனில் தமிழரிடையேகூட அது உள் ளார்ந்த உணர்ச்சியுரு வில்லேயே நிகழ்கிறது. அதனைக் கூருய்வு செய்து அதன் தன் மையைக் கணித்துணர்பவர் மிகச்சிலரே.

தமிழக மொழிப்பிரச்சினை இன்று தமிழகத்துக்கு மட் டுமேயுரிய பிரச்சினையாகத் தோற்றலாம். ஆனல், அதுவே நாடிய இந்தியாவின் மொழிப் பிரச்சினையாகவும்; நாடாமறு நாடிய உலகின் மொழிப்பிரச் சினையாகவும் ஆகத்தக்கது— ஆகத்தொடங்கியுள்ளது. ஏனெனில், அதன் வேர்கள் தமிழக மொழிவரலாற்றிலும் தமிழினப்பரப்பாகிய தென் னக மொழிவரலாற்றிலும் மட்டுமன்றி, இந்தியாவின் மொழிவரலாற்றிலும், உல கின் மொழிவரலாற்றிலுமே நெடுந்தொலை ஊடுருவிச் சென்று பரவியுள்ளவை ஆகும்.

இப்பிரச்சினையின் தன் மையை நாம் ஓர் உருவகத்தால் விளக்கலாம்.

சிறு குழந்தைகளை நம் தாய்மார் 'இரண்டு கண்ணன் அதோ வருகிறன். விரை வில் சாப்பிட்டுவிடு' என்று அச்சுறுத்துவதைக் கேட் டிருக்கிறேம். குழந்தை எப் படியோ 'இரண்டு கண்ணன் அச்சத்துக்கு உரியவன்' என்று நினைத்து நடுங்கும்.

உலகப் பெரும்போர் முடி வில் ஒரு சுற்றுலாவாணன் பிரான்சுநாட்டுச் சிற்றூர் சென்றிருந்தான். ஊர் எல்லை யில் ஒரு சின்னஞ்சிறு குழந்தை அவனைக்கண்டதும், 'ஐயையோ! முழு மனுசன் வந்துட்டானே!' என்று அலறிப்புடைத்துக் கொண்டு ஓடிற்று. அதன் அலறல் சுற்றுலாவாணனுக்கு மலைப் பைத் தந்தது. ஊருக்குள் சென்ற பின்தான் அதன் கோரப் பொருள் அவனுக்கு முழு உருவில் தெரியவந்தது.

அந்த ஊரில் போரின் கொடுமை உக்கிரதாண்ட வமாடிற்று. காலிழந்தவர், கையிழந்தவர்; கண்ணிழந்த வர், மூக்கிழந்தவரென இழந் தவர் வரிசையிலேயே எல் லாரும் காணப்பட்டனர். உறுப்பிழக்காதவராக எவ ரையுமே காணவில்லை.

உறுப்பிழந்த உருவத்தைக் கண்டால் குழந்தைகள் அச்சங் கொள்ளுதல் இயல்பு. ஆனல் மேற்குறிப்பிட்ட பிரஞ்சுக் குழந்தை உறுப்பிழந்த உருவங்களையே கண்டு பழகி யிருந்தது. உறுப்பிழந்த உருவம்தான் அதற்கு மனித உருவாய்த் தோன்றிற்று. ஆகவேதான் முதன் முதலாக உறுப்பிழக்காத ஒரு முழு மனிதனைக் கண்ட போது அது பேயைக் கண்ட மாதிரி விழுந்தடித்துக் கொண்டு ஓட நேர்ந்தது.

உலகத்திலும் சரி, இந்தியா விலும் சரி—மொழிகளின் நிலை இன்று பொதுவாக இந்தப் போர்க்கால பிரான்சின் நிலையை ஒத்ததாயுள்ளது. தமிழகத்தின் நிலையோ மேற் குறிப்பிட்ட சுற்றுலாவாணன் நிலையை ஒத்தது.

மனிதனின் உறுப்புக்கள் வெறுந் தோற்றத்துக்குரிய உடலுறுப்புக்கள் மட்டுமல்ல. ஒவ்வோர் உறுப்பும் மனிதன் வாழ்விலேயே ஒரு பகுதி, அவ னது உலகிலேயே ஒரு பகுதி இயங்குவது ஆகும். எனவே கண் இல்லாதவனுக்குப் பார் வையில்லாதது மட்டுமன்று குறை. அவனது உலகிலே ஒளியே கிடையாது, நிறம் கிடையாது, அழகு கிடை யாது. மலரும் இசையும் அவ னுக்கு ஒன்றுதான். பகலும் இரவும் அவனுக்கு வேறல்ல. இதுபோலவே காது இல்லாத வனுக்கு ஓசை என்பதே இன்னதென்று தெரியாது. அவன் உலகில் மொழி கிடை யாது, இசை கிடையாது. உட லுறுப்புக்களுக்கும் வாழுலகுக் கும் இடையேயுள்ள இதே தொடர்பு மொழியிலும் மொழி யுலகிலும் உண்டு. ஏனெனில் உடலின் உறுப்புக்கள் போன்று, மொழிக்கும் பலபண் புத்திறங்கள் உண்டு. அவற் றுள் ஒன்று குறைந்தால் கூட, அக்குறைபாடு மொழியின் வாழ்விலும் மொழிக்குரிய இனவாழ்விலும் மட்டுமன்றி, மற்றமொழிகளின் வாழ்விலும் மனிதப்பேரின வாழ்வாகிய உலக வாழ்விலும் பெருத்த ஊறுபாடு உளதாக்கிவிடும்.

எல்லா மொழிகளுக்கும் இயல்பான, எல்லா மொழி களிலும் இயல்பாக இருக்க வேண்டிய பண்புத்திறங்களை நாம் ஒன்பதாக வகுக்கலாம். அவை தாய்மொழித் தன்மை அல்லது பேச்சுவழக்குடைமை, கலைத்தன்மை அல்லது இலக்கிய வழக்குடைமை, இயல் வழக்கு அல்லது அறிவழக்குடைமை, அரசியல் வழக்கு அதாவது ஆட்சிமொழியாய் இயங்கும் தன்மை, தெய்வவழக்கு அதா வது சமயவழக்குடைமை, தேசீ யத்தன்மை, இனத்தன்மை, சமு தாயத்தன்மை, பொது மொழித் தன்மை அதாவது பிறமொழித் தொடர்புரிமை என்பன.

உலகில் இன்று ஏழாயிர மொழிகளுக்குமேல் நிலவு கின்றன என்று மொழி நூலார் கணித்துள்ளனர். தாய்மொழித்தன்மை அல்லது பேச்சுவழக்கு இவை எல்லா வற்றுக்கும் உரிய பொதுப் பண்பேயாகும். ஆயினும் மொழியின் இந்த அடிப்படை உரிமையை இழந்து விட்ட மொழிகள் இல்லாமலில்லை.

உலகில் பேச்சு வழக்கிழந்து மாண்டு மறக்கப்பட்டு மறைந்த மொழிகளும் ஆயிரக்கணக்காகவே இருக்கவேண்டும் என்று கூறலாம். அவற்றுள் நூற்றுக்கணக்கானவைதான் இலக்கிய வடிவிலோ வரலாறு புதைபொருள் மூலமாகவோ நமக்குத் தெரியவருகின்றன.

தமிழ், தமிழின மொழிகள், சீனம், சப்பான் ஆகியவை நீங்கலாக உலகில் ஆயிர ஆண்டுகளுக்கு மேல் பேச்சு வழக்கிலிருந்த மொழிகள் எவையுமில்லை. ஆகவே பேச்சு வழக்குரிமை மொழிகளின் உயிர்நிலைப் பண்புத்திறமானாலும், எப்படியோ பல மொழிகள் அதை இழந்து விட்டன, பல இன்னும் இழக்கக்கூடும் என்பதை கவனித்தல் வேண்டும்.

உலக மொழிகள் ஆயிரக்கணக்கானவையாயிருந்தாலும், எழுத்து அமைதியும், இலக்கிய இலக்கணமுடைய மொழிகள் நாற்றுக்குக் குறைவனவையேயாகும். அவற்றுள்ளும் ஆயிர ஆண்டளவு இலக்கிய முடையன — நாம் மேலே குறிப்பிட்ட தமிழ் சீனம், சப்பான் ஆகிய மூன்றின மொழிகளே. தற்கால மேலை ஐரோப்பிய மொழிகளும் சிங்கள முதலிய தென் கிழக்காசிய மொழிகளும் கிட்டத்தட்ட ஆயிர ஆண்டளவை எட்டி வருகின்றன. இந்தியாவில் தமிழின மொழிகள் தவிர, மற்ற மொழிகள் ஒரிரு நூற்றாண்டளவும் வேறு சில இன்னும் குறைவாகவுமே இலக்கிய வழக்கு எட்டி வருகின்றன. தமிழ், சீனம் ஆகிய இரண்டு மொழிகள் மட்டுமே உலகில் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட நீடித்த இலக்கிய வாழ்வுடையவையாய் இயல்கின்றன. அத்துடன் மேலையுலகில், இலத்தீன், கிரேக்க மொழி ஆதிக்கத்தாலும் கீழையுலகில் சமஸ்கிருதம் முதலிய மொழிகளின் ஆதிக்கத்தாலும் பொதுவாக எல்லாத் தாய் மொழிகளிலும் நெடுங்காலமாக இலக்கிய வழக்குரிமையும் இயல்வழக்குகளும் அல்லது அறிவுவழக்குரிமையும் தடைப்பட்டு வந்துள்ளன இன்றுகூட இந்த ஆதிக்கம் காரணமாக உலகத் தாய் மொழிகளின் இயல்பான வளர்ச்சி வேகம் தடைபட்டே இயங்குகிறது. தமிழகம், சீனம், சப்பான் ஆகிய மூன்று பரப்புக்களில்மட்டும்தான் தாய் மொழியே இலக்கியத்துக்கும் அறிவுத்துறைக்கும் தகுதியுடையது என்ற நிலை தொன்றுதொட்டு இருந்து வருகிறது.

எல்லா மொழிகளிலும் இந்நிலையில் இக்காலத்தில் வளர்ந்து வருகிறது என்பது மகிழ்வுக்குரிய செய்தி. ஆனால் தமிழகமே இதில் உலகத்துக்கு முன்மாதிரியாய் இயங்கி வந்துள்ளது என்பது பொதுவாகக் கவனிக்கப்படாத செய்தி ஆகும்.

தாய்மொழியே ஆட்சி மொழியாகவும் அமைவது இயல்பு என்பதை இன்று எல்லாரும் முக்கி முனகிக் கொண்டாவது ஒப்புக் கொள்வர். கல்வித்துறையில் அதுவே பாடமொழியாக வேண்டும் என்பதும் ஒப்புக் கொள்ளப்பட்டு வருகிறது. ஆனால் இந்தப் பண்புகளை உலகில் பரப்பிய, பரப்பி வரும் மொழி தமிழ்மொழியே என்பதைப்பலரும் கவனிப்பதில்லை. ஏனெனில் கி.பி. 14-ம் நூற்றாண்டு வரையில் இங்கிலாந்தில் ஆங்கிலம் ஆட்சி மொழியாகவோ பாட மொழியாகவோ அமையவில்லை. தவிர ஐரோப்பா முழுவதும் இலத்தீனும் ஆசியாவில் சமஸ்கிருதமும் தாய் மொழிகளின் மீது இத்துறைகளில் இன்னும் ஆதிக்கம் கொண்டுதான் இருக்கின்றன.

உலகவரலாற்றில் நாம் மேலே குறிப்பிட்ட மூன்று இனங்களில்தான் தொன்று தொட்டுத் தாய்மொழி ஆட்சி மொழியாய் உரிமைபெற்று நிலவுகின்றது.

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிக்குமுன் ஆட்சிமொழியாய் இயங்கிய தாய்மொழிகள் தென்னாட்டு மொழிகள் மட்டுமே.

தெய்வவழக்கு அல்லது சமய வழக்குரிமை என்ற பண்புத்திற வகையில் தமிழுக்குக் கிடைத்தபேறு உலகில் வேறு எந்தமொழிக்கும் அதில் பத்தில் ஒரு பங்கு கூடக் கிடைக்கவில்லை என்று துணிந்து கூறலாம். தமிழகத்துச் சமயங்கள் யாவும் தமிழையே தம் சமயவழக்கு மொழியாகக் கொண்டுள்ளன. தவிர, தமிழகத்துக்குவந்த புதிய சமயங்களுக்குக்கூடத் தமிழில் பேரளவான இலக்கியம் ஏற்பட்டுள்ளது. ஒரு காலத்தில் இந்தியாவின் தேசியச் சமயங்களாயிருந்த புத்தம், சமணம் ஆகிய நெறிகளின் இலக்கியத்தில் மிகப் பெரும்பகுதியும் மிகச்சிறந்தபகுதியும் தமிழில்தான் உள்ளன. மொத்தத்தில் உலகில் மற்றெல்லா மொழிகளிலும் உள்ள சமய இலக்கியம் முழுதும் திரட்டினாலும்கூட, அளவிலோ, பண்பிலோ அது தமிழர் சமய இலக்கியத்தின் முன் பெரிதும் தலைகுனியவே வேண்டிவரும். தெய்வமொழிகள் என்று எவ்வெவற்றையோ சிலகாலம் சிலர் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் கடவுள் தமிழ் ஒன்றைத்தான் தெய்வ மொழி என்று ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்று சொல்ல வேண்டும். தமிழிலக்கியத்தை உணர்ந்த உலகமொழியறிஞர் அனைவரிடையேயும் இதுபற்றி கருத்து வேற்றுமை கிடையாது.

மொழியின் பண்புத்திறங்களுள் நாம் மேலே ஆருவதாகக் குறித்த கூறு உண்மையில் அதற்கு முன்னுள்ள ஐந்து கூறுகளின் முழு நிறைவே ஆகும். தன் இலக்கியமும் தன் அறிவுத் துறையும் தன் ஆட்சியும் தன் சமயவழக்கும் தாய் மொழியாகவே கொண்ட உலகின் முதல் தேசியமொழியும் தமிழே – முழுநிறைவான தேசியமொழி இன்று கூட அது ஒன்றே. தமிழ் மூவரசர் என்ற தமிழ் வழக்கு உலகில் எங்கும் எக்காலத்திலும் இதுவரை இல்லாத ஒன்று. தமிழ், தமிழர், தமிழகம் என மொழியில் இனமும் நாடும் ஒரே பெயர் பெற்ற இனமும் உலகில் பிறிது கிடையாது. அரங்கேற்றம் தமிழகத்தின் தனிப்பண்பு. கவியரங்கம் தமிழகமும் அரபு நாடும் மட்டுமே அறிந்தவை. சங்கம் தமிழகமும் பிரான்சும் மட்டுமே அறிந்தவை. கலை அரங்கேற்றம் தமிழகமும் சீன, சப்பான் இனங்களும் மட்டும் அறிந்தவை. மொழிக்குத் திசையும் எல்லையும் வகுத்து, சொற்கள் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என வகுத்த வகுப்பு முறை இன்றுவரை எம்மொழியிலும் கிடையாது. இயல், இசை, நாடகமென்ற முத்தமிழ் வகுப்பு முறையும் இன்றைய அகில இந்திய கலைக்கூடம் (Indian Akademi) கண்டெடுத்துக் கொள்ளும் வரை உலகில் எங்கும் இல்லாத ஒன்று.

உலகில் அடிப்படை மொழி இயக்கம் (Basic Language Movement) ஏற்படுமுன்னரே தமிழில் தனித்தமிழ் இயக்கம் ஏற்பட்டு, உலகில் அப்பண்பின் கலைகளைத் தாண்டிவிட்டது. இந்தியாவில் உபநிடதங்கள் ஏற்படுவதற்குச் சங்க இலக்கியமே வழிவகுத்தது. சமஸ்கிருதத்தில் பரதநாட்டிய சாத்திரமும், அலங்கார சாத்திரமும் பிறவும் ஏற்படவழி வகுத்தது தமிழே. இந்தியாவில் பக்தி என்ற சொல் அறியப்படுவதற்கு ஆயிர ஆண்டுகட்கு முன்பே பக்தி இயக்கம் வளர்ததும், இந்து மதத்தை ஓர் அறிவுமதமாக்கிய ஆசாரியர்களை ஈன்றளித்ததும் தமிழகமே.

இந்தியத் தேசிய நாட்டாண்மைக் கழகம் (Indian National Congress) உருவானது தமிழகத்தில்தான். விவேகானந்தரை உலக அறிஞராக்கியதும் தாகூரை உலகக் கவிஞராக்கியதும், காந்தியடிகளை உலகப் பெரியாராக்கியதும் தமிழகம்தான். இந்தியாவில் இந்தி எதிர்ப்பை உருவாக்கி அப்புயலின் கருவாய் இன்றும் இயல்வது தமிழகமே.

உலகுக்குத் தேசிய இயக்கங்களையும், சமய இயக்கங்களையும், உலக இயக்கங்களையும் கலை இயக்கங்களையும், நாட்டிய பண்புகளையும் அலையலையாக உருவாக்கி அனுப்பும் உலக மூலத்தனமாகத் தமிழகம் விளங்கி வந்துள்ளது என்பதை இந்தியத் தலைவர்களும் உலகமக்களும் அறிந்தாலன்றித் தமிழகத்தின் புதிர்களுக்கு ஒரு விடிவு ஏற்படுவது இயலாது என்னலாம்.

தமிழ்ப் புலவர் நெடுங்காலமாகவே தமிழைக் கன்னித் தாய் மொழி என்றும் சாவா மூவாக் கன்னி இளமை மொழி என்றும் பாடிவந்ததுண்டு. கன்னித்தாய் வழிபாடு உலகில் எங்குமே முற்காலங்களில் பரவியிருந்தது. ஆனால் அதை மொழியுருவாகக் கண்ட நாடு தமிழகம் ஒன்றுதான். அத்துடன் இக்கன்னித் தாய்மை அல்லது சாவா மூவா இளமைத் தன்மை தமிழகத்தைப் பொறுத்தமட்டில் வெறும் கவிதைக் கற்பனையன்று. உலகில் எல்லா நாடுகளிலும், மொழிகளிலும் இனங்களிலும் நடைமுறைப்படுத்தி வெற்றி காணத்தக்க ஒரு திட்டமாகவே தமிழர் உருவாக்கி, தமிழ் மொழியில் அதை முக்காலே மூன்று வீசம், முக்கால் வீசம் அளவுக்கு நிறைவேற்றியும் சென்றுள்ளனர்.

மீந்த கால்வீசம் நிறைவேறுவதற்குத் தடையாக இந்திக் கட்டாயநுழைவு வந்துள்ளதே என்று தான் தமிழ்ப்புலவர் அடிக்கடி சீறுகின்றனர். இந்த உலகவரலாற்றுண்மையை உணர்பவர் அந்தச் சீற்றம் கண்டு சீறமாட்டார்கள். அது தெய்வீக சீற்றமென்று கண்டு அதை வணங்கி வழிபடுவார்கள்.

தமிழின் சாவா மூவா இளமை, கன்னித்தாய்த் தன்மை தெய்வீகமாக வந்தமைந்ததன்று, தற்செயலான பண்புமன்று, தேசியத் தன்மை, இனத்தன்மை சமுதாயத் தன்மை பொதுமொழித் தன்மை, அதாவது பிற மொழித் தொடர்புறவு உரிமை ஆகிய பண்புத் திறங்களைப் பேணி வளர்ப்பதனாலே அம் மூவாக் கன்னி யிளமை நயம் உருவாகத் தக்கது, வளரத்தக்கது ஆகும்.

மொழியின் வாழ்வில் மொழியினத்தின் பரப்பு முழுவதும் அதன் எல்லாவகுப்பினரும் எல்லவகைப்பட்ட தொழிற் குழுவினரும் பண்புக்குழுவினரும் ஒருங்கே பங்குகொள்ள வேண்டும். அதுபோல மொழியின் பேச்சுவழக்கிலிருந்து இலக்கிய வழக்கு நெடுந்தூரம் வேறுபட்டுவிடாமலும், இலக்கிய வழக்கிலிருந்து பேச்சுவழக்கு நெடுந்தொலைவு விலகிவிடாமலும் பாதுகாத்தல்வேண்டும். தமிழிலக்கணம், சிறப்பாகத் தொல்காப்பியம் உலக மொழிகளில் வேறு எம் மொழியிலக்கணத்துக்கும் இல்லாத இந்த நோக்கத்

தோடு உருவாக்கப்பட்டுள்ளது என்பதை உலகம் இன்னும் கண்டுகொள்ளவில்லை என்றே கூறலாம். இந்த நோக்கமே மொழியின் சமுதாயப் பண்பு. தமிழில் சங்க இலக்கிய மட்டுமன்றித் தலபுராணங்களும், திருவாசகமும், உலாபரணி முதலிய பிற்காலத்தனவாகப் புலவர் பலரால் கருதப் பிரபந்தங்களும் தமிழின் இந்த அடிப்படைச் சமுதாயத் தேசிய நோக்கம் கொண்டனவாகும். தமிழகத்தின் எல்லா ஊர்களும், நகர்களும், எல்லா மாவட்டங்களும், வகுப்புக்களும், தொழில்களும் தமிழ்லக்கியத்தில் பெற்றுள்ள சரிசமப் பிரதிநிதித்துவம் போல ஒன்றை மேலை நாட்டு வாழ்வுகளில் கூட நாம் இன்றும் காணமுடியாது என்பது ஊன்றிக் காணத்தக்கச் செய்தி ஆகும்.

மொழிக்கும் மொழிபேசும் இனத்துக்கும் இடையே நூற்றாண்டு கடந்து நூற்றாண்டாக இன்வாழ்வுக்கால முழுதும் உள்ள இடையறாத் தொடர்பே இனப்பண்பு ஆகும். தமிழில் முழு அளவில் இப்பண்பு தனித்தமிழ் மரபிலும் தனித்தமிழ் இயக்கத்தாலும் பேணப்பட்டு வருகிறது. தமிழுக்கு அடுத்தபடியாக உலகில் இப்பண்பு பேணப்பட்டுள்ள மொழிகள் சீனம், செர்மன், ருசிய மொழிகளே.

தமிழ், சீன முதலிய ஒரு சில மொழிகளில் தான் மொழியும் மொழியினமும் இணைபிரியாமல் ஆயிரக்கணக்கான ஆண்டு நீடித்து மொழியின் பண்பு இனத்திலிருந்தும் இனத்தின் பண்பு மொழியிலிருந்தும் பின்னி ஒன்றுபட்டு இனத்தேசியமாக வளர்கின்றன. தனித் தமிழ் இப்பண்பை இன்றும் செறிவாக்குகின்றது. ஏனெனில் தமிழ் மொழிக்கும் தமிழினத்துக்கும் உள்ள நீடித்த உறவு தமிழ்ச்சொற்களுக்கும் தமிழ்ப் பண்பாட்டுக்கும் தனித்தமிழ்ச் சொற்கள் காரணமாகவே கிடைக்கின்றது. தமிழ்மொழி, தமிழிலக்கியம் ஆகியவற்றை இடையறாப் பொங்கல் வளத்துக்கும் உயிராற்றல் குன்றாத வளமான வளர்ச்சிக்கும் இப் பண்பே உதவுகிறது.

இந்தப் பண்பைப் பிற மொழிகளும் வளர்த்தால் அவையும் உலகில் நிலையாக நீடித்து வள இடமுண்டு ஆனால் அவை இன்றும் இப் பண்பைக் கண்டுணரவில்லை.


மொழியின் பண்புத் திறங்களில் கடைசியானது, ஆனால் முக்கியத்துவத்தில் மற்றவற்றினும் ஒருசிறிதும் குறையாதது பொதுமொழிப் பண்பு அல்லது பிறமொழித் தொடர்புரிமைத் தன்மை ஆகும்.

உலகில் நாம் வங்கக்கடல், அரபிக்கடல், செங்கடல், முதலிய பல கடல்களின் பெயர்களைக் கூறுகிறோம். ஆனால் இவை கரை பற்றிய வேறுபாடுகளேயன்றிக் கடல் நீர் பற்றிய வேறுபாடுகளல்ல. கரை வேறுபாடு, ஆழவேறுபாடு உப்புத்தன்மையில் வேறுபாடு, நீரோட்ட அழுத்த வேறுபாடுகள் ஆகியவை கடல்களிடையே இருந்தாலும், அடிப்படையில் உலகில் கடல் ஒன்றே. அதுபோலவே உலகில் தமிழ், தெலுங்கு, வங்காளம், ஆங்கிலம் முதலிய பல மொழிகள் இருந்தாலும், இவற்றிடையே நாடு, இனம், பண்பு, சொல்தொகுதி ஆகியவற்றில் வேறுபாடுகள் இருந்தாலும், இவைகால இடச்சூழல் வேறுபாடுகளே தவிர வேறல்ல. உண்மையில் அடிப்படை நிலையில் மனித இனத்தின் மொழி ஒன்றே.

மொழியின் பண்புத்திறங்களுள் தற்கால மேலையுலக அறிஞர்கள் கூட ஒரு சிறிதும் அறிந்து கொள்ளாத பண்புத்திறம் மொழியின் பொதுமொழித் தன்மையேயாகும். ஒவ்வொரு மொழியும் ஒரு மொழியினத்தைக் கொழுகொம்பாகக் கொண்டே படர்வதானாலும், அது அந்த மொழியினத்துக்கு மட்டுமே உரியதன்று, மனித இன முழுமைக்குமே யுரியது. குளத்தில் பல மீன்கள் வாழ்ந்தாலும் ஒவ்வொரு மீனுக்கும் குள முழுதும் உரியது. உலகில் பல மனிதர் இருந்தாலும் ஒவ்வொருவருக்குமே உலக முழுமையும் உரியது. ஒரு வட்டத்தின் சுற்றுவரையில் கோடிக் கணக்கான புள்ளிகள் இருந்தாலும் ஒவ்வொரு புள்ளிக்கும் விட்டத்தின் மையமே மையமாகும். இந்நிலையிலேயே உலகின் ஒவ்வொரு மொழிக்கும் உலகத்தின் எல்லா மொழியினங்களுடனும் எல்லா மொழிகளுடனும் நேரடிகாகத் தொடர்பு கொள்ளும் உரிமை உண்டு. ஆனால் உலகில் நெடுங்காலமாகப் 'பொதுமொழிகள்' என்ற பெயரால் சில பல போலி ஆதிக்க மொழிகளின் மற்ற மொழிகளின் அடிப்படை உரிமையாகிய இப்பொது மொழி உரிமையை இடையவந்து நின்று தடுக்கின்றன. முதலாளித்துவ வாணிக உலகில் வாங்குவோருக்கும் (Consumers) விற்பவர்க்கும் (Producers) இடையே போலி வாங்குவோர் போலி விற்போராகத் தரகு இடையிட்டு தரகர் என ஏற்படுவதைக் கண்டித்த ஒரே உலக அறிஞராய்க் காந்தியடிகள் விளங்கினர். ஆனால் மொழித் துறையில் இதே இடையிட்டுத் தரகுப் பண்பை எதிர்க்க ஒரு மொழியறிஞர் இதுகாறும் உலகில் தோன்றாதது வருந்தற்குரிய செய்தியேயாகும்.

திராவிட இன,மொழி, பண்பாடு காத்துப் பேணி வளர்த்திட

நகராட்சி-என்கிறநிலை மாற்றி திராவிட மாநிலங்கள் கூடுதல் அதிகாரம் பெற்றிட





திராவிட மாநிலங்கள் விரும்பினால் தமக்குள் ஒரு கூட்டமைப்பு ஏற்படுத்த


நேரடியாகவும், மறைமுகமாகவும் வரும் இந்தி ஆதிக்கத்தைத் தடுக்க அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவைத் திருத்திட




கொழுத்த வரிகள்
டில்லிக்கு என்றிருப்பதை
மாற்றி மாநிலங்களுக்கு
ஆக்கிட;



வடநாடு தொழிற்பேட்டை,
தென்னாடு வாணிபச்சந்தை
என்பதை மாற்றி தென்-
னகத்தைத் தொழில்
மயமாக்கிட;



பணக்காரர் மேலும்
பணக்காரராகவும்,
ஏழை மேலும் ஏழையாவ-
-தையும் தடுத்து உண்-
-மையான சமதர்மம்
நிலைநாட்டிட;




மக்களின் அடிப்படை உரிமைகளையும், எதிர்க் கட்சியினரின் அரசியல் உரிமைகளையும், பாதிக்கும் சட்டப்பிரி வுகளையும், அரசாங்க உத்திரவுகளையும் மாற்றியமைக்கப்...







...பாடுபடும் தி.மு.கழகத்தை கொள்கையில்லாக் கட்சியென் றுல் விலாநோகவன்றே சிரிப்பர் விவேகிகள்!



# விடுதலையின் விடிவெள்ளி

## சிந்தனைச் சிற்பி சி.பி.சிற்றரசு



ரோம்பிக்கிடக்கும் சிறைச் சாலைகளின் கதவுகள் பயங்கர சத்தத்தோடு திறப்பதும், சிறையுடையணிந்து விடுதலே விரும்பிகள் குறுகிய கொட்டடி களிலே குறுகிக்கிடப்பதும், ஏற் கனவே நீண்ட சிறைத்தண் டனையடைந்த கிரிமினல் கைதி கள் உணவை சுமந்து வருவதும் "எதற்காக வந்தீர்கள்" என்று அவர்கள் நம்மைக்கேட்கவும், "நீங்கள் அறிந்தோ அறியா மலோ செய்த குற்றங்கள், ஏழ் மையைத் தழுவியதாயினும், முன்கோப முடிவாயினும் சிந் திக்காத செயல்: எனினும், வறு மையே உங்களை இந்த முடி




# இந்திவெறி

வுக்குகொண்டுவந்திருப்பினும், யாரோ குற்றம் செய்ய, உங்களுக்கு அது பொய்யெனக் காட்டவாய்ப்பும் வசதியும் உற்ற நிலையில் நீங்கள் குற்றக் கூண்டிலும், அவர்கள் பரம யோக்கியர்கள் மத்தியிலே நடமாடவுமான நிலை ஏற்பட்டிருப்பினும் பேராசையால் பொய்ச்சாத்திட்டிருப்பினும், உங்கள் பால் நாங்கள் அனுதாபப்படினும் சட்டங்கள் நம்மனோவரையும் சந்திக்கவைக்கும் இடம் இதுதான்.

"பலமுறை சிறைசென்ற குற்றவாளிகள், 'தூ. இதுதானா சிறை? வெளியுலகுக்கும் நமக்கு மிருக்கும் தொடர்பைத் துண்டிப்பது இந்த நீண்ட-நெடுஞ்சுவர்கள் தான். வெளியே வேலையில்லை ஏன் என்று கேட்பார் யாருமில்லை; கையேந்தி வாழ்வது மகாக்கேவலம். ஆனால் திருடுவது அதைவிடக் கேவலமென்பதையாவது அவர்களுக்கு உணர்த்தமா சிறைச்சாலை? அங்கே இதோபதேசங்கள் இல்லை-இதுவரை இருந்தவர்களும், இப்போது இருப்பவர்களும், இனி இருக்கப் போகிறவர்களும் அனைவரும் யந்திரங்களே-மாலை ஆறு மணி முதல் காலை ஆறு மணி வரையில் அவன் இருட் கூண்டில் அடைபட்ட பறவையே. காலை 6 மணிக்கு காவிரியில் நீராடுபவர்களை எண்ணுவான் ஆநிரைகளை ஓட்டிச் செல்லும் ஆயர்களை நினைப்பான். பஞ்சாலையின் சங்கோசை பாதித் தூக்கத்திலிருக்கும் தொழிலாளியை எழுப்பும். ஓவர்நாள் காலையும் நாட்குறிப்பில் ஒரு ஏட்டைக் கிழிப்பதை எண்ணுவான். நாம் சிறைக்கு வந்தபோது ஆறு மாதக் குழந்தை இப்போது ஓடி விளையாடும் பருவத்திலிருக்கும்.

"நமக்கு ஆயுள் தண்டனை? ஆயுளே தண்டனையடையத் தான் வந்ததோ? புரியாது அவனுக்கு! புரியவைக்கும் வாய்ப்பாகிலும் சிறையிலே உண்டா? அதுவும் இல்லை. உள்ளே

# யானை ஏற்றம்



யானை ஏற்றம் — அந்தக் காலத்தில் ஒரு கலை;
இந்தக் காலத்தில் ஒரு தொழில்! அன்பளிப்பு: — யோகு

சென்றவனுக்கு இதோபதேசம் செய்வதற்குபதில் முதுகில் அடி விழுகிறது-எதனால்? அழைத்த குரலுக்கு 'ஆசரா'கவேண்டும்.

அழைப்பு எப்படித் தெரியுமா? அதையும் சொல்லிவிடுகிறேன். ஒரு பழையகுற்றவாளி ஒரு தாளோடு வந்து வந்து நிற்பான். அவன் பக்கத்திலே ஒரு காக்கி உடை அதிகாரி. அந்த அந்தப் பழைய குற்றவாளி, 6-மாதம் ஆறுமுகம், பத்து மாதம்பக்தவத்சலம்,-4 மாதம் நாராயணசாமி, ஒரு மாதம் உலகநாதா, இரண்டு மாதம் இரத்தினம்,; ஐந்து மாதம் அய்யாக்கண்ணு, ஏழு மாதம் ஏகாம்பரம். எட்டு மாதம் பட்டாபி-ஒன்பது மாதம் உருமி. என்றெல்லாம் கூப்பிட்டவுடன் வந்து வரிசையில் நிற்கவேண்டும். அது முதல் இடைவேளை உணவுக்காகக் கொஞ்ச நேரம் போக மாலை 5-30மணி வரை மாடாக உழைக்கவேண்டும். உணவு? அது அவன் வீட்டுக்கனவு!! கண்ணை மூடிக் கொண்டு, மூக்கைப் பிடித்துக் கொண்டு உள்ளே தள்ளித் தீரவேண்டும். உழைத்து உருமாறிப்போய் கண்ணயர்ந்து விடுகின்றான்.

இரவில் அவன் முன்னால் தோன்றுவது ஒரு மண்சட்டி. பக்கத்தில் படுத்துத் தூங்குகிறார்களே. என்று வெட்கமேது? வெளியுலகத்தில் இவையெல்லாம் கடந்துவிட்டவனை முற்றும் துறந்த ஞானி என்கிறார்கள் சிறையிலே இவையெல்லாம் துறந்திருக்கிறானே, அவனுக்கு என்ன பெயரோ தெரியவில்லை. இவர்களைப் பார்த்துக்கொண்டே, இவர்கள் எல்லாம் திருந்தும்நாளைத்தான் விடுதலைப் பேரிகையின் முழக்கம் என்கிறோமா?

உலகம் முடியுமட்டும் இப்படிச்சிலர்இருக்கவே செய்வார்கள். அவர்கள் இருக்கும் வரை சிறைச்சாலைகள் இருந்தே தீருமா? இவர்களை திருத்தவும், பழைய சிறைச்சாலைகளை இல்லாமலாக்கவும், புதிய சிறைச்சாலைகளைக் கட்டாமலிருக்கவும் வழியுண்டா என்றவாறே அரசியல் குற்றவாளிகள் எண்ணிக்கொண்டிருக்கின்றனர்.

இந்த நிலையில்தான் கிரிமினல் குற்றவாளிகள், 'நீங்கள் எதற்காக வந்தீர்கள்'- என்று கேட்கிறார்கள். நாடு அடைந்த கேட்டை நொடியில் சொல்லி முடிப்பதா-நயவஞ்சகர்கள் அற்பத்தனதை ஒரு நாளில் சொல்லி முடிப்பதா-"தமிழே! நீ வாழ்க" என்ற குரல் சனநாயக மேடையிலும்,"தமிழே! நீ ஒழிக!"என்ற குரல் சர்வாதிகார மேடையிலும ஒலிக்கும் காரணத்தால் இந்தியெனும் விலை மாது, தமிழகத்தில் சதிராடும் கேவலத்தை தமிழ் மறவர்கள் கண்ணில்படக் கூடாதென்று யாரும் பார்க்காத இடம், யாரையும் பார்க்காத இடமான சிறைச்சாலையிலே அடைத்திருக்கிறார்கள்.

நேரு ஒரு நியாயவாதி என்றிருந்தோம். அவர்தான் கடைசி சனநாயகவாதி என்றிருந்தோம். அவர் கடைந்தெடுத்த கோழையாய் விட்டார். இந்தி வெறியர்களின் மிரட்டலுக்கு அடிபணிந்துவிட்டார். அவர் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய இயக்கத்தைப் பங்கப்படுத்தியவர். ஏன் இந்த இந்தி அசிங்கங்களுக்கு பயப்படுகிறார். பேச்சுரிமை என்பதில் மொழி உரிமையடங்கவில்லையா? இது சட்டத்தில் ஏற்பட்ட குழப்பமல்லவா? அந்த தந்திர சாலிகள் இதற்கோர் சமாதானம் சொல்லமுடியும். ஏதாவது-பேச்சுரிமையை நாங்கள் அழிக்கவில்லை, தாராளமாகப் பேசலாம். ஆனால் இந்தியைத்தான் பேசலாம் என்று. இது எவ்வளவு திமிர் பிடித்த வாதம் என்பதை யாரும் அறியாமலில்லை, மொழிப்போர் வேறு போராக இன்றில்லையானாலும், நாளை நாளையில்லையானாலும் மற்றோர் நாள் விடுதலைப்போராக

மாறுது என்பதற்கு எந்த நூற்றாண்டை நாம அடையாளம் காட்டமுடியும்? எத்தனையாவது தலைமுறையினரை நாம் அடையாளம் காட்டமுடியும்?

இருண்ட வீடு ஒளிபெறுவதும், ஏற்றிய தீபம் நிலைபெறுவதும் நடக்கக்கூடாது என்று யாரால் சொல்ல முடியும்? சிறையிலே அடைக்கப்பட்ட ஜோமாகென்யாட்டா, கொடுமைக்காளான பிடரல் காஸ்ட்ரோ-லண்டன் சிறையிலே அடைப்பட்டுக்கிடந்த -காலஞ்சென்ற சன்யாட்சன், பாதர் மகாரியஸ் அடிமைக் காலனிகளாகயிருந்த பல ஆப்பிரிக்க நாடுகள் இன்று விடுதலைக் கொடியையேற்றியிருக்கவில்லையா?

அலைமோதி வந்த விடுதலை வேகத்தை அலகாபாத் பண்டிதர் அறிந்திருந்தும் ஏன் தயங்குகிறார்?

இனி, தமிழ்த் தாயை குருதியால்தான் குளிப்பாட்டவேண்டும் என்ற முடிவுக்குத் தமிழகம் வந்தாய்விட்டது. அதன் போர்க்கொடியை உயர்த்தியர்கிவிட்டது இங்கும் சில கயவர்கள் இருக்கின்றார்கள் என்று நாம் கவலைப்படத் தேவையில்லை.

ஏனெனில், அந்த காட்டிக் கொடுத்தவரின் முன்னோர்கள் வரலாற்றின் முதல்வரியிலிருந்து இன்றுவரை இருக்கிறார்கள். ஆப்ரகாம் லிங்கனுக்கு ஒரு வில்லியம் பூத். கென்னடிக்கு ஒரு.....! இயேசுவுக்கு ஒரு ஜூடாஸ், நவநந்தர்களுக்கு ஒரு சாணக்கியன் வீரன் சிவாஜிக்குஒரு காகப்பட்டர். திப்புக்கு ஒரு பூர்னையா- இப்படி பலர் தோன்றித்தானிருந்தார்கள். இன்னும் தோன்றுவார்கள். நெற்பயிருக்குத்தான் விதைவிதைக்கிறோம். பதருக்கு விதை விதைக்கிறோமா? இல்லையே. பதர்தானுக முளைப்பதில்லையா? அதைப்போலத்தான், பதரை அடிக்கடி களைவோம்! அறுவடையின் கடைசி நாள் விடுதலையின் விடிவெள்ளி. ○

# வேறு மார்க்கமில்லை



உங்களுடைய தாய் மொழி உங்களுடைய தந்தையர் மொழி - தலைமுறை தலைமுறையாக நமக்கென்று இருக்கின்ற மொழி - ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னுலேயே எந்த மொழி வந்தாலும் இந்த மொழி போகாது என்று புலவர்கள் உறுதியாகச் சொல்லத்தக்க பலம் பொருந்திய இந்த மொழி இழுக்காக நடத்தப்படுகின்ற இந்த நேரத்தில் - வட நாட்டிலே உள்ளவர்கள் இந்திக்கு காட்டுகின்ற ஆர்வம், ஆவேசம் பிடிவாதம் உணர்ச்சி நம்மிலே யாருக்கும் வரவில்லையானால் தமிழன் என்ற பட்டியலிலிருந்து நம் முடைய பெயரை நீக்கிக்கொள்வதைத் தவிர வேறு ஒரு மார்க்கமுமில்லை.

**- அறிஞர் அண்ணா**

# வரலாறு படம்!



மேலேயிருப்பது 1930-ம் ஆண்டில் எடுக்கப்பட்டது.

வெள்ளையன் போட்ட 144 சட்டத்தைமீறி காங்கிரசார் ஊர்வலமாக வந்தனர்.

வெள்ளையனின் போலீசார் அந்த அறமுறையை வன்முறையால் சந்தித்தனர்!

ஊர்வலமாக வந்தவர்கள் மீது தடியடிப் பிரயோகம் நடக்கிறது!

144 என்கிற பெயரில் பிரபலமடைந்த வாய்ப்பூட்டுச் சட்டம் சுதேசிச் சரக்கல்ல!

காங்கிரஸ் பிரச்சாரத்தை ஒடுக்க வெள்ளைக்காரன் தயாரித்த சட்டம்!

அரசியல் சட்டத்தில் பேச்சுரிமை பெறுங்கியிருப்பதாகத் தம்பட்டமடிக்கும் காங்கிரசார், வெள்ளையன் விட்டுச் சென்ற 144 சட்டத்தில் அடைக்கலம் புகுவது எத்தகைய அவமானம்!

144 உத்தரவுகளால் காங்கிரஸ் பிரச்சாரம் தடைப்பட்டதா? காங்கிரஸ் அரியாசனம் ஏறுவது நின்றதா? வெள்ளையன் இந்த நாட்டிலேயே நின்றானா?

இல்லை! அதனால் வெள்ளையன் இந்த நாட்டை விட்டு ஓடுவது துரிதப்பட்டது!

அதுபோலத்தான் இப்போதும்! 144 உத்தரவுகளால் இந்தி எதிர்ப்புப் பிரச்சாரம் தடைபடாது. மேலும் 144 போடுவதே இந்தி எதிர்ப்புக்கான ஒரு பிரச்சாரம்தான்!

144 ஐ நம்பி ஆண்டவர்கள் அதிகநாள் நீடித்ததில்லை என்பதுதான் வரலாறு சொல்லும் பாடம்!

# ஊர்களின் முற்கால-இக்காலப் பெயர்கள்



டாக்டர் மா. இராசமாணிக்கனார்

## வடஆற்க்காடு — போளூர் வட்டம்

பார்த்தசாரதி என்னும் பெயரைப் பார்சு என்றும், சேஷாத்திரி என்னும் பெயரைச் சேச்சு என்றும் சுருங்க அழைப்பது பெற்றோர் வழக்கம். இவ்வாறே ஊர்களின் முழுப் பெயர்களுள் காலப் போக்கில் மக்கள் உச்சரிப்பினால் எழுத்துக்கள் திரிதலும் கெடுதலும் தோன்றலும் இயல்பு. இதற்குச் சான்றாக கீழ் வரும் ஊர்ப் பெயர்களைக் காண்க.

## வட ஆற்காடு — போளூர் வட்டம்

| | முற்காலப் பெயர் | கல்வெட்டுச் சான்று | இக்காலப் பெயர் |
|---|---|---|---|
| 1 | குன்றத்தூர் | 108 - 1941-42 | குன்னத்தூர் |
| 2. | அம்மையேந்தல் | 114 ,, | நம்மியேந்தல் |
| 3. | திரிசை | 115 ,, | திருசூர் |
| 4. | ஓதலபாடி | 142 ,, | ஓதலவாடி |
| 5. | நரசிங்க நல்லூர் | 149 ,, | நரசிங்கபுரம் |
| 6. | தைச்சுமான்பாடி | 156 ,, | தச்சாம்பாடி |
| 7. | உலகம்பட்டு | 166 ,, | ஓலகம்பட்டு |
| 8. | போளியூர் | 184 ,, | போளூர் |
| 9. | வில்லியராய நல்லூர் | 185 ,, | |
| | வில்லவராய நல்லூர் | 190 ,, | வில்வராயநல்லூர் |
| 10. | உலகளந்த சோழபுரம் | 194 ,, | சோழபுரம் |
| 11. | சீயனேந்தல் | 82 - 1942-43 | சினந்தல் |
| 12. | வேளாரேந்தல் | 88 ,, | வேளானந்தல் |
| 23. | சிறுவளூர் | 93 ,, | சிறுவள்ளூர் |
| 14. | கிஞ்சலிகுப்பம் | 99 ,, | துரிஞ்சிக் குப்பம் |

## திருத்தணி வட்டம்

| முற்காலப் பெயர் | கல்வெட்டுச் சான்று | இக்காலப் பெயர் |
|---|---|---|
| 15. நென்மலி | 146 ,, | நெமலி |
| 16. சீயபாடி | 164 ,, | சிவ்வாடி |
| 17. ஆர்க்காடுகுப்பம் | 171 ,, | ஆர்க்காடு |
| 18. இடுப்பூர் | 174 ,, | இறுப்பூர் |
| 19. காட்டுக் கும்முண்டூர் | 197 ,, | காட்ர மோட்டூர் |

## தென்னூர்க்காடு— திருக்கோவலூர் வட்டம்


| | | |
|---|---|---|
| 20. பருதல் | 364 - 1937-38 | பரிந்தல் |
| 21. திருநெல்வெண்ணெய்<br>திருநெல்வெணை | - தேவாரப்பாடல்பெற்றதலம்<br>372 - 1937-38 | நெய்வணை |
| 22. சுரவிப்பட்டு | 384 ,, | சொரையப்பட்டு |
| 23. தேவியாரேந்தல் | 391 ,, | தேவியந்தல் |
| 24. இடையாறு | 395 ,, | இடையார் |
| 25. சண்பை | 429 ,, | ஐம்பை |
| 26. முருக்கம்பாடி | 452 ,, | முருக்கன்பாடி |
| 27. காங்கேயன்நல்லூர்<br>காங்கேயநல்லூர் | 455 ,, | காங்கியனூர் |
| 28. சித்தவட்டம்<br>(சித்தவடம்) என்பது | 462 ,,<br>பெரியபுராணம் | சித்தப்பட்டணம் |
| 29. மணலூர் | 464 ,, | மணலூர்ப்பேட்டை |
| 30. (1) இறையானரையூர்<br>இராசமகேந்திரன் காலம்<br>(2) இறைவானரையூர்<br>(அச்சுதராயர் காலம்<br>கி.பி. 1551)<br>(3) இறைவானரசூர்<br>(கி. பி. 16-ஆம் நூற்<br>றாண்டு) | 473 ,,<br>479 ,,<br>507 ,, | எல்வாணசூர் |
| 31. சிறுபுத்தூர் | 291 - 1939-40 | சிறுவத்தூர் |
| 32. திருநறுங்கொன்றை | 303 ,, | திருநறுங்கொண்டை |
| 84. (1) திருவருஞ்சுரம்<br>(2) திருவரஞ்சுரம்<br>(3) திருவலஞ்சுரம்<br>(4) திருவரஞ்சிரம் | 182 - 1940-41<br>181 ,,<br>187 ,, | வரஞ்சரம் |
| 34. சோழபாண்டியபுரம் | 205 ,, | சோழவாண்டி |

## வேறு ஊர்ப் பெயர்கள் சில

| | | | |
|---|---|---|---|
| 35. இருவிஞ்சம் | 114 - 1944-45 | (கி.பி. 1249) | |
| இருவஞ்சம் | 119 ,, | (கி.பி. 1251) | ரிஷி |
| ரிஷிவிந்தம் | 110 ,, | (கி.பி. 1519) | வந்தியம் |
| (கள்ளக்குறிச்சி வட்டம்) | | | |

| முற்காலப் பெயர் | கல்வெட்டுச் சான்று | இக்காலப் பெயர் |
|---|---|---|
| 36. திருவீருஞ்சுரம் (வேலூர் வட்டம்) | 193 - 1939-40 | (திரு)விரிஞ்சிபுரம் |
| 37. மன்னனூர் மன்னனூர்குடி | 220 - 1943-44 | மன்னூர் மன்னூர்குடி |
| 38. சிங்களாந்தகபுரம் | 228 ,, | சிங்களந்தபுரம் |
| 39, இராசகேசரிச்சதுர்வேதி மங்கலம் இராசகேசரி (பாபநாசம் வட்டம்) | 4 - 1945-6 | இராசகிரி |
| 40, சுத்தமல்லிச் சதுர்வேதி மங்கலம் சுத்தமல்லி | 5 ,, | சித்தமல்லி |
| 41. குடியாற்றுத் தண்டலம் (செய்யாறு வட்டம்) | 293 - 1954-55 | குண்டியான்தண்டலம் |
| 42. திருமன்றம் (ஸ்ரீபெரும்பூதூர்வட்டம் | 362 ,, | திருமணம் |
| 43. திருமாகாளம் (நன்னிலம் வட்டம்) | 93 - 1910 | திர்மாளம் |
| 44. மணற்கால் (லால்குடி வட்டம்) | 135 - 1928-29 | மணக்கால் |
| 45. கோவந்தபுத்தூர் | 159 ,, | கோவிந்தபுத்தூர் |
| 46. திருமேயம் | 24 - 1936-37 | திருமயம் |
| 47. திருநெய்த்தானம் | 278 - 1911 | தில்லைஸ்தானம் |
| 48. புள்ளமங்கலம் | 551 - 1921 | புள்ளமங்கை |
| 49. திருமயானம் | 321 - 1910 | திருமெய்ஞ்ஞானம் |
| 50. திருச்சிற்றேமம் | 187 - 1926 | திருச்சிற்றம்பலம் |
| 51. காமரவல்லி (உடையார்பாளையம் வட்டம்) | 74 - 1914 | காமரசவல்லி |
| 52. பெரிங்கூர் | 220 - 1906 | பேரங்கியூர் |
| 53. சந்திரலேகச் சதுர்வேதி மங்கலம் | 203 - 1926 | செந்தலை |
| 54. திருக்குடித்திட்டை | 297 - 1908 | திருக்களித்திட்டை |
| 55. உறந்தைராயன்நாடு | 46 - 1913 | ஓரத்தநாடு |
| 56. ஊற்றத்தூர் | 489 - 1912 | ஊட்டத்தூர் |
| 57. திருப்பாற்சொற்றி | 71 - 1928-29 | |
| திருப்பாச்சேத்தி | 72 ,, | திருப்பாச்சேத்தி |
| கி.பி. 1550 | | |
| 58. திருமழபாடி | 74 - 1895 | |
| திருமழுவாடி | 75 ,, | திருமழவாடி |
| திருமழவாடி | 76 ,, | |

| | முற்காலப் பெயர் | கல்வெட்டுச் சான்று | இக்காலப் பெயர் |
|---|---|---|---|
| 59. | அரும்பார் | 3 - 1913 | அரும்பாவூர் |
| 60. | குழித்தண்டலை | 179 - 1935-36 | குழித்தலை |
| 61. | பழையசயங்கொண்டம் | திருச்சி கெஜட்டர், பக். 252 | பழையசெங்கடம் |
| 62. | திருப்பிடவூர் | 48 - 1908 | திருப்பத்தூர் |
| 63. | திருப்பாச்சில் | | திருவாசி |
| 64. | அழும்பில் | 223 - 1914 | |
| | அழிம்பில் | 227 - 1914 | அம்புக்கோவில் |
| 65. | (1) சுவர்ணவரதராஜபுரம் | | |
| | (2) வரதராஜபுரம் | சேலம் கெஜட்டர் | ராசிபுரம் |
| | (3) ராஜபுரம் | வால். 2, பக். 236 | |
| | (4) ராசபுரம் | | |
| | (5) ராசிபுரம் | | |
| 66. | (1) மாறன்பாடி | | |
| | (2) மாறம்பாடி | 94 - 1931-32 | மானம்பாடி |
| 67. | பரம்பூர் | 151 - 1939-40 | பனமூர் |
| 68. | கல்லைக் குறிச்சி | 280 ,, | கள்ளக்குறிச்சி |
| 69. | மழவராயனல்லூர் | 289 ,, | மழவராயனூர் |
| 70. | கணிகைநல்லூர் | 1 - 1940-41 | |
| | கணிஞலூர் | 4 ,, | கணியனூர் |
| 71. | சக்கர மூதூர் | 25 ,, | சக்கரமல்லூர் |
| 72. | காமக்க நல்லூர் | 101 ,, | காமக்கூர் |
| 73. | (1) திருவுளோம் போகீர் | ...சுந்தரர் தேவாரம் | |
| | (2) திருவுளோம் பூதூர் | | திருவிளம்பூதூர் |
| | (3) திருவிளம்பூதூர் | 112 ,, | |
| 74. | குறும்பில் | 274 ,, | குறும்பூர் |
| 75. | செம்மாம்பாக்கம் | 32 - 1911 | செம்பரம்பாக்கம் |



தீர்மானிக்கப்பட்ட சட்டமெல்லாம் கடைசிவரை நிலைத்ததுமில்லை; இருந்ததும் இல்லை. தீர்மானிக்கப்பட்டதெல்லாம் நிலைத்திருக்குமானால், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் நிலைத்திருக்க வேண்டும்.

நிறைவேற்றப்பட்ட சட்டங்களெல்லாம் இறுதிவரை இருந்திருக்கவேண்டுமானால், ரௌலட் சட்டம் போன்றவைகள் நிலைத்திருக்கவேண்டும்.

**அறிஞர் அண்ணா**

# இடமில்லை இதயத்தில்



கீரில்கள் பதிந்தன, மண்ணில்! தன்னிடம்வளர்ந்தவன் மண் கடைசி முறையாகமுத்தமிடுகிறதோ; என்னவோ?

[வீதியைக் கடந்தேன்; வீட்டில் நுழைந்தேன். மனைவி வந்தாள், அவளுக்கு முன் அவள் ஒளிச் சிரிப்பு வந்தது! படுத்திருந்த அவள் புருவம் கேள்விக்குறியாய் நின்றது]

காதல் விளக்கே! பொன்னை உரைத்துப் பார்ப்பது போல அண்ணன் என்னை உரைத்துப்பார்த்தார்

"பத்து மாதம் சுமந்திருந்தாள் என் அன்னை! எத்தனை ஆண்டுகள் சுமக்கிறாள் என் அன்னை பூமி? அந்த அன்னையின் மொழி காக்க - அன்னியன் மொழி விரட்ட நான் தயார்!" என்றேன்.

துடிக்கும் என்னைத் தட்டிக் கொடுத்தார் என் அண்ணன்! தகுதி பெற்றேன்! நாளைக்கு போர்க்களத்தில் எனக்கு வீர உணவு!

[மனைவி போகிறாள்,]

எங்கே போகிறாய்? இன்று நான் சாப்பிடப் போவதில்லை. காலியான வயிற்றோடு உறவாடுவேன். காலியான வயிறுடனேயே நான் உறவமிழக்கப்போகிறேன்.

இதற்குமுன்எத்தனையோ வகை கனிவர்க்கங்களை புசித்திருக்கிறேன். எத்தனையோ வகையான உணவை உண்டிருக்கின்றேன். எனினும், நாவின் சுவையும்வயிற்றின்பசி அடங்கவில்லை.

ஆனால்..நாளைக்குக் கிடைக்கும் போர் உணவை நினைக்கும் போதே ... என் நாவும், வயிறும் நிறைந்து விடுகின்றன.

இதற்கு முன் எத்தனையோ அழகு ரதிகளைப் பார்த்திருக்கின்றேன்; இயற்கை எழிலைபருகியிருக்கிறேன்.எனினும் என் "கண்ணின் வேட்கை தணிந்ததில்லை.

'ஆனால்..நாளைய போர்க்கள காட்சியை நினைக்கும்

அழகர்

போதே...என் கண்ணின் வேட்கை நிறைவு பெற்றுவிட்டது.

இதற்கு முன் எத்தனையோ கோகிலவாணிகளின் - குயிலினத்தின் இசை வெள்ளம் என் காதில் புகுந்திருக்கிறது. எனினும் என் காது திருப்திப்படவில்லை.

ஆனால்...நாளைக்குப் போர்க்களத்தில் ஒலிக்கப் போகும் போர் முரசொலியை நினைத்ததுமே, என் காது நிறைந்து மயங்கிக் கிடக்கிறது.

இதற்கு முன் எத்தனையோ தடவை உன் மெய்யில் மெய்யாகக் கலந்திருக்கிறேன். எனினும், என் 'வேகம்' தணிந்ததாகத் தெரியவில்லை.

ஆனால், நாளைய போர்க்களத்தில் வெட்டுண்ட உடல்களோடு கலந்துவிடப் போகிறேன். அதை நினைத்ததும்.....

[என் மனைவியின் கண்களில் நீர்! கருப்பு-சிவப்பு மேல் துண்டால் துடைத்தேன். அவள் கட்டிலின் மீது பாயைப்போட்டாள்; பாய் மீது தன்னையும் போட்டாள்; பிறகு அதில் என்னையும் எடுத்து வைத்தாள் இரவு மெல்ல-மெல்ல நகர்ந்தது. கீழை வானில் கதிர்க் கோலை ஊன்றி மெல்ல எழுந்தான் உதயசூரியன்.]

எப்போதும் எனக்குமுன் எழுபவள்-ஏன் இன்று தூங்குகிறாள்? என் வாழ்வில் மணம் வீசிய மலர்த்தோட்டமே! உன்னுடைய மணமலர் ஒவ்வொன்றுக்கும் முத்தம் தருகிறேன், வாங்கிக்கொள்! இனி உனக்கு முத்தங்கள் தருவாரில்லை என்பது உண்மை!

இனி, நான் என் வாழ்வில் யாருக்கும் தரப் போவதில்லை என்பது மட்டும் அதைவிடப் பெரிய உண்மை!

விழித்து விட்டாயா,? இன்னும் என்னிடம் பெறுவதற்காகவே விழித்துக் கொண்டாய் போலிருக்கிறது.

எனக்காக உதட்டில் தேனையும்-உள்ளத்தில் பனியையும் தேக்கி வைத்திருக்கும் 'இனிப்புத் தேக்கமே'! புறப்பட நேரமாகிவிட்டது.

[குழந்தைபோல் என்னை ஆக்கினாள். குளிப்பாட்டினாள்; குளிர் வெள்ளை ஆடைகொடுத்தாள்; உடுத்தி விட்டாள்! 'போகிறேன்' — என்றதும் என்ன சொல்வாளோ என ஏங்கினேன். காதல் சீட்டாட்டத்திலேயே 'வேல் விழித் துருப்பை' விடுபவளாயிற்றே! ஆனால், கூறினாள் ஒன்று; குளிர்ந்தது உள்ளம்.]

போருக்குக் கணவனையும்-மகனையும் அனுப்பிவிட்டு வீட்டில் அமர்ந்திருப்பாள் பழைய புற நானூற்றுக்காரி!

"போகாதே! போகாதே! என் கணவா!"--என்று புலம்பி, போருக்குப் போகின்ற கணவனுக்குப் பேடித்தன்மை ஊட்டப் பார்த்தாள், இடைக் காலத்துக்காரி!

ஆனால், உங்களுக்குப் பின்னால் நானும் வருவேன்; பெண்களும் போரிட்டனர் என்ற புதிய நானூறு சமைப்பேன்-என்றாள் என் மனைவி!

பெருமை, என்னுடலின் கனத்தைக் குறைத்து, வானத்தில் பறக்க வைத்தது!

விடை பெற்றுக் கொண்டேன்! என் வாழ்க்கை வசந்தத்தின் தலைவியே! வருகிறேன்!

நான் பெற்ற செல்வங்களே! வெளியூருக்குப் போகும் போது காசு கொடுப்பேன்... இப்போது வெளியுலகிற்குப் போகிறேன். காசைவிட உயர்ந்த முத்தங்களைத் தருகிறேன். வாருங்கள்.

உங்கள் அப்பன், ஐசுவரியங்களைத் தேடி வைக்கவில்லை! அழகான தோட்ட வீடுகள் நமக்கில்லை!

# ஒரு சொல் கேளீர்!

**நமது மாநில அரசு மட்டும் இந்த மசோதாவை எதிர்த்துக் குரல் கொடுத்திருந்தால் டில்லி இந்த மசோதாவைக் கொண்டு வர ஆயிரம் முறை யோசித்திருக்கும்**

**– அறிஞர் அண்ணா**

என்றாலும்... 'வீரனின் மகனடா நீ!' என்ற விருதை உங்களுக்குத் தேடி வைத்திருக்கிறான்.

எதிர் காலங்களே! உங்களுக்காக தியாகம் செய்யப்போகும் இறந்த காலத்தின் முத்தங்கள் இதோ!

என் இதயத் தேனீ விரும்பும் பூவே! இறுதியாக உன்னை விட்டுப் பிரிகிறேன்.

[இருவண்ணக் கொடி என் கையில் ஒளிவிட்டுப் பறக்கிறது. போர்க்களம் சென்றேன். அதோ...என் தலைவன்.]

குள்ளமான உருவம்தான்! கோடை மழை பொழிவது போல் ஒளி வெள்ளம் அவரிடமிருந்து பாய்கிறது.

"சாவும் வாழ்வும் இருதுருவமாக இப்போது இருக்கலாம்; வீர வழி கொண்டு பார்; இரண்டும் ஒன்றாய்த் தெரியும்!" என்று புதுவிளக்கம் அளித்து, என்னை மரண பயத்திலிருந்து மீட்டவர் அவர்.

எத்தனையோ தலைவர்கள் இந்த நாட்டில்உலவுகிறார்கள். அவர்கள் பயணத்துக்குத் தயார்; ஆனால் பாதையைத் தான் காணோம்; படகு தயார்,

ஆற்றைத்தான் காணேம்-என்பதுபோல,

என் தலைவன்தான் இந்த நாட்டில் வேதனையால் அழுகின்ற மக்களுக்குக் கண்ணீர் வடிக்கின்ற ஒரே தலைவர்!

துயரப்படுவோருக்காக ஏழு முறை சிறைக் கொடுமைகளை ஏற்றுக்கொண்டார்.

பழிகள், முள்முடிபோல் அவரை உறுத்துகின்றன! பாவிகளின் நாக்குகள், சாட்டைபோல் அவரை அடிக்கின்றன! அடக்குமுறை, கற்சிலுவைபோல் அவரை அழுத்துகின்றது.

என்றாலும் ... துயரப்படாத முகத்துடன் வேதனைகளை ஏற்கிறார்.

அவர் எங்களுக்கு வாழ்வு உருவாவது எப்படி என்று சொல்லித் தரவில்லை.

உருவிய வாளுக்கு எப்படி பயப்படாமல் இருப்பது என்பதை சொல்லித் தந்தார்.


வாயைத் திறக்கும் போது இதயத்தையும் திறந்து வைக்கப் பழக்கினார்! கண்ணில்லாமல் பார்க்கப் பழக்கினார்! இறகில்லாமல் பறக்கப் பழக்கினார்; துயரில்லாமல் வாழப் பழக்கினார்! பயமில்லாமல் சாகப் பழக்கினார்!

அவர் காலத்தில் நான் வாழ்கிறேன்-அது எனக்குப் பெருமை!

அவர் கட்சியில் இருக்கிறேன். அது எனக்குப் பூரிப்பு!

அவருக்காகச் சாவேன்-அது எனது பாக்கியம்.

[போர் முரசொலி கேட்கிறது. களத்தில் முன்னின்று அறப்போர் நடத்தினேன். எதிரியைக் காக்க--ஏந்தப்பட்ட துப்பாக்கியிலிருந்து ஒரு குண்டு வருகிறது. என் மார்புத் திரையை விலக்கி இதயத்திற்குள் சரண



# இந்தி வந்தால் தமிழ் கெடும்

பேராசிரியர்
**அன்பு கணபதி**

பச்சையப்பன் கல்லூரி தமிழ்ப் பேராசிரியரும், தமிழ் எழுத்தாளர் சங்க முன்னாள் தலைவருமான அன்பு கணபதி தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:

கேள்வி: இந்தி வந்தால் தமிழ் கெடுமா?

பதில்: இந்தி வந்தால் தமிழ் கெடும் என்பது என்னுடைய திட்டவட்டமான கருத்து. எங்களுடைய முன்னோடிகள் கருத்தும் அதுவே. அதற்குச் சரித்திரம் சான்று பகரும்.

கேள்வி: தமிழ் மொழி கடவுள் போன்றது; அதைக் காப்பாற்றுவேன் என்று சொல்லுவது பைத்தியக்காரத்தனம் என்று சொல்லுகிறார்களே...

பதில்: 'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில்' என்ற பழமொழியைத்தான் நினைவூட்டவேண்டும்.

கேள்வி: ஆங்கிலத்தை ஏற்றுக்கொண்டீர்களே, ஏன் இந்தியை ஏற்கக்கூடாது என்று கேட்கிறார்களே...

பதில்: ஆங்கிலம் வந்ததால் தமிழ் வளர்ந்தது. சமுதாயத்தில் விழிப்புணர்ச்சியூட்டி விடுதலை வாங்கித் தந்தது ஆங்கிலம் என்பதை மறக்க முடியாது. ஆங்கிலத்தின் இடத்தைத் தாய் மொழிதான் பெறமுடியும். பெறவும் வேண்டும்.

கேள்வி: தமிழைக் கெடுக்க வரும் இந்தியை எதிர்க்கத் தமிழாசிரியர்கள் திட்டம் என்ன?

பதில்: சந்தர்ப்பம் நேரும்போது மொழி காக்க தமிழாசிரியர்கள் படை ஒன்று இருக்கின்றது என்பதை மட்டும் இப்போதைக்கு நினைவூட்டுகின்றேன்.

டைந்தது. என் உடல் மெதுவாக - தளர்ந்து சாய்ந்தது. ரத்தம் ஊற்றென மார்பில் பெருக்கெடுக்கிறது. ஒரு தோழன் ஓடிவந்து மார்பை மூட வருகிறான்.]

மூடனே! அதை மூடாதே அது வைரமடா; வைரம்! வைரத்தை யாராவது மூடி வைப்பார்களா? திறந்து வை! சிவப்பு வைரக் கவசத்தை அண்ணன் வந்து பார்க்கட்டும்! அவரது கண்ணீர் என் மார்பிலுள்ள துளை வழியாய் என் இதயத்திற்குப் போகட்டும்!

ஏன் தோழர்களே; கண்ணீர் விடுகிறீர்கள்?

கனிக்காக மலர் சிதைகிறது; நாட்டுக்காக என் உடல் சிதைகிறது! அவ்வளவுதானே!

ஒரு விதை நெறி முறையோடு மண்ணில் அழிந்தால் ஒரு செடி தோன்றும். ஆனால் அதில் பல விதைகள் இருக்கும்!

மனிதன் தன்னுடன் பிறந்த மரணத்தைக் கண்டு பயப்படுவது வினோதமாய் இருக்கிறது.

வீதியில் யாரோ பிணமாக வருகிறார்கள்! பார்க்காமலேயே போகிறான்! தெரிந்தவர் இறக்கிறார்-துன்பப்பட்டவன் போல் காட்டிக் கொள்கிறான்! நண்பன் இறக்கிறான்! கண்ணீரைக் கொட்டுகிறான்! அவனது தாயோ-சேயோ-மனைவியோ இறந்தால் கதறுவான்! ஆனால்.....அவன் இறப்பதை நினைத்து விட்டால்.....நான்கு நாளைக்குத் தூக்கமே வருவதில்லை.

இந்த வேடிக்கை மனிதர் களைப் போல் எங்களை அண்ணன் ஆக்கவில்லை.

அதோ...என் அண்ணன் வருகிறார்; அண்ணா; அண்ணா.....!

நான் பேசுவது அவர் காதில் விழவில்லையா? ஆம்...என் பேச்சு நின்றுவிட்டது.

என் அண்ணன்...என் அருகில் அமர்ந்து, என் போர்க்களக் காயத்தின் மேல் கண்ணீர் விடுகிறார்! இது போதும் எனக்கு!

இனி...சாவே! நீ வரலாம்!

என் கோப்பையை நான் காலியாக்கி விட்டேன்!

என் உயிர் மீன் தரையில் கிடக்கிறது!

வானத்தின் கதவுகள் திறந்து விட்டன. நான் நடந்து வந்த வழி முடிந்து விட்டது.

இனி நடக்கப் போகும் வழியில் மலர் குவிந்து விட்டது.

நான் மண்ணில் பிறந்த காரியத்தைக் காரணத்தோடு முடித்துவிட்டேன்.

தோழர்களே! ஏன் மூடிய எனது விழியை திறந்து பார்க்கிறீர்கள்? அசையாதிருக்கும் கையை ஏன் தொட்டுப் பார்க்கிறீர்கள்? என்னுயிரை இந்த உடலிலா தேடுகிறீர்கள்?

என் உயிரன்னம் பொதிகை மலை பூக்குளத்தைத் தாண்டி பறந்து கொண்டிருக்கிறது.

அதை ஏன் அழுக்குக் குட்டைகளில் தேடுகிறீர்கள்?

உங்கள் தோழன், புகழ்த் தேவியின் சாம்ராஜ்யத்தில் நுழைகிறான்! அவளுடைய மருமகனாக நுழைகிறான்!

ஆரவாரமிட்ட நதி, கடலில் புகும்போது எவ்வளவு அமைதியாக நுழையுமோ, அவ்வளவு அமைதியாக நுழைகிறேன்!

அதோ...பறையொலி கேட்கிறது! சாவின் காலடியோசை மிகத் தெளிவாகக் கேட்கிறது! நேரமாக ஆக...ஓசை பெருத்துக்கொண்டே வருகிறது.

சாவே! வா! வெகுகாலம் உன்னைத் தேடி வந்தேன்!

உன்னுடைய எதிரியான பிறப்பு என்னைத் தன்னந் தனியனாகவே அனுப்பினான்!

நீயும்-என்னைத் தன்னந்தனியனாகவே அழைத்துச் செல்கிறாய்!

சாவே! உன்னை மிக மிகக் கெஞ்சிக் கேட்டுக் கொள்வேன்!

கடைசி காலத்தில் எனது உடலின் மீது குடியேறுபவன் நீ என்று தெரியும்!...எனக்கு அதில் உரிமையில்லை என்பதும் தெரியும்! என்றாலும், உன் கால் பிடித்துக் கேட்டுக்கொள்வேன்.....என் உடலில் குடியேறுகிற நீ, என் இதயத்தில் மட்டும் குடியேறாதே!

ஏனெனில்.....அங்கே தான் என் தலைவன் நிரந்தரமாகக் குடியேறியிருக்கிறான். ❀



## அறைகூவல்!

இந்திச் சட்டம் நிறைவேறிய பின்... இந்தி மொழியில் தான் சட்டம் இயற்றப்படும், பரீட்சைகள் நடத்தப்படும்; பாராளுமன்றத்தில் காரியங்கள் நடைபெறும். இது தெரிந்தால் அங்கு வா; இல்லையேல் நீலகிரி தொதவர்களைப்போல் ஆப்பிரிக்கக் காடுகளில் வாழும் நீக்ரோக்களைப்போல்--குருவிக் காரர்களைப்போல் உள்நாட்டோடு -- வீட்டோடு -- கூட்டோடு அடைந்துகிட- என்பதுதான் இந்திச் சட்டம் விடுக்கும் அறைகூவல்.

**அறிஞர் அண்ணா**

# எல்லாம் அவன்செயல்!


## ஆனந்தம்



அவனன்றி ஓரணுவும் அசையா தென்றும்,
ஆட்டுவித்த படியாவும் ஆடு மென்றும்,
சிவனன்றி வேறிறைவன் கிடையா தென்றும்
திடமாக நம்பிவந்த தில்லை யப்பர் -
தவமுனிவர் நிலைமையிலே பற்றில் லாமல்,
தன்செயலால் ஆவதொன்றும் இல்லை; மேலும்
அவனருளே அறிவார்யார்? என்றெப் போதும்
அயராமல் கூறிவரும் வழக்க முள்ளார்.

கரம்பிடித்த மனையாளும் கால மானாள்.
கலங்கவில்லை, கண்ணீரும் பெருக்க வில்லை!
பரம்படித்து, நீர்பாய்ச்சி, விதைதெ ளித்துப்,
பயிர்வளருங் காலத்தில் உழவன் செத்தால் -
நரம்புடைந்த யாழ்நிலைதான் ஆகு மன்றே?
நாயகியை இழந்தவர்க்கும் 'அஃதே! ஆனல்,
உரம்படைத்த நெஞ்சோடும் என்றும் போலே
உருக்கமுடன் 'அவன்செயல்'என் றுரைத்து நின்றார்!

தாயற்ற சிறுமகளோ தவிக்க லானாள்!
'தாமரையின் இலைமீது தண்ணீர்' என்னும்
நோயுற்ற தத்துவத்தால் வாழ்வை நோக்கி
நுடங்குகின்ற தந்தையரின் போக்கை மாற்ற
வாயற்றுத், தானுக வளர லானாள்:
வனங்களிலே கொடிமுல்லை படரு மாறு,
காயற்ற மாமரத்தை யாரும் பேணார்;
கனிவற்ற தந்தைதனைப் பேணி வந்தாள்!



தக்காளிப் பழம்போன்ற தளத ளப்பும்,
தண்ணிலவின் வெண்ணொளிபோல் குளுகு ளுப்பும்,
சிக்காத சேல்போலத் துடிது டிப்பும்,
சீர்பெற்ற சிற்பமென எழிலும் கண்டு
சொக்காத ஆடவரே இல்லை! அந்தச்
சுந்தரியின் தந்தையிடம் அணுகி யோர்க்கும்
'எக்கால மானாலும் என்னுல் என்ன?
எல்லாமே அவன்செயல்தான்!' என்று சொல்வார்.

தந்தைவழி தனக்குதவுந் தகுதி யில்லை!
தளிர்பழுத்துச் சருகாகிக் கீழே வீழ்ந்து
எந்தவழி போனாலும் யாருக் கென்ன?
இதுபோல்தன் இளமைநலம் வாடி, உள்ளம்
நொந்திருக்கும் நிலைமைதனை எடுத்துக் காட்ட
நூறுதரம் நினைத்திருப்பாள்; சொல்ல மாட்டாள்!
பந்தமுள்ள சுற்றத்தார் சொன்ன போதும்
பழைமையான வேதாந்தம் படித்தார் தந்தை!

பரமசிவன் பார்வதிக்குப் பாதி தந்தும் -
பாசமுடன் கங்கைதனைத் தலையில் வைத்தும்--
தரமிழந்து தாருகையில் முனிவர் பெண்டிர்
தமைவிரும்பி மகிழ்ந்தாராம்: புராணம் கூறும்!
சிரமமுடன் நாமெதற்கு மணம்வெ றுத்துச்
சிவனடியை நாடுவது? குடும்பத் தார்க்கு
வரமருள மறுப்பாரோ இறைவ னாரும்?
வாழ்வுநெறி அஃதலவென் றுறுதி பூண்டாள்.

மனந்துணிந்து காதலனைத் தானே தேடி,
மகிழ்வோடு பிரறறியா வண்ணம் கூடித்
தினந்தினமும் புத்தின்பம் துய்க்க லானாள்.
திகட்டாத சுவைநுகர்ந்த ஆறுந் திங்கள்
இனந்தெரியா இன்பத்தின் உருவ யிற்றில்
எழிலோடு வளர்வதனைத் தோற்றம் காட்டச் -
சினந்தெறிக்கும் விழிகளுடன் தந்தை சீறச்...
சிரிப்புடனே அருமைமகள் பேச லுற்றாள்:

"யார்செய்த வேலையென எரிய வேண்டாம்!
எல்லாமே அவன்செயல்தான் என்று நம்பும்
நீர்செய்த அலட்சியத்தின் விளைவே ஈதாம்!
நெஞ்சத்தின் அலைகளையோ அடக்க மாட்டீர்!
ஊர்செய்த வேண்டுகோளும் மதிக்க வில்லை!
உலகத்தின் வழக்கத்தைக் கடைப்பி டித்தேன்;
போர்செய்த சிந்தனைக்கோர் அமைதி கண்டேன்!
புதுவாழ்வை என்செயலால் பெற்றேன்!" என்றாள்.

# எது சிறுபிள்ளைத்தனம்?




பொறுப்பாட்சியை எப்படி நிறுவுவது - என்ற நோக்கத்துடன் இந்தியாவுக்கு வந்த சைமன் கமிசனை புறக்கணிப்பதென காங்கிரசு முடிவு செய்தது. 1929-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 3-ம் தேதியன்று சைமன் கமிசன் பம்பாயில் வந்திறங்கியது. கமிசன் சென்றவிடங்களிலெல்லாம் புறக்கணிக்கப்பட்டது. இதைக் கண்ட சர்க்கார், பய முறுத்தல்-பயங்கரச் செய்கைகள் முதலிய வழிகளைக் கையாண்டனர். லாலா லஜபத்ராய் போன்ற பெரும் தலைவர்கள் போலீஸ் தடியடிக்குட்பட்டனர்.

அப்போது சென்னையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் போலீஸ் காட்டுமிராண்டித்தனமாகச் சுட்டது. அறப்போரில் ஈடுபட்டவர்கள் ஊர்வலமாகச் செல்லும் காட்சிதான் மேலேயிருப்பது!

படத்திலிருக்கும் சிலர் இன்று இவ்வுலகை நீத்திருக்கலாம்; பலர் தள்ளாத வயதினராய் - முதுபெரும் கிழவர்களாய் இருக்கலாம்! அவர்களை நோக்கிக் கேட்கின்றோம். நீங்கள் அப்போது அறப்போரில் ஈடுபட்ட நேரத்தில் வெள்ளையன் உங்கள் அறவழிப் போராட்டத்தைச் சிறுபிள்ளைத்தனம் என்றுதான் சொன்னான்.

இன்று அதே முறையில் தி.மு. கழகம் இந்தித் திணிப்பிற்கு அறவழியில் காட்டும் எதிர்ப்பை ஆள்வோர் சிறுபிள்ளைத்தனம் என்கிறார்கள்!

ஆம், பெரியோர்களே! காலம் மாறிவிட்டது! காங்கிரசு மாறிவிட்டது!

நீங்கள் இரத்தம் சிந்தி வளர்த்த காங்கிரசு இன்று அதிகார போதை தலைக்கேறி வெள்ளைக்காரன் பாஷை பேசுகிறது!

இப்போதிருக்கும் காங்கிரசு அழிக்கப்படவேண்டிய காங்கிரசு என்பதை இப்போது ஒப்புக்கொண்டு, அதை அழிக்க முயலும் கழகத்துக்கு வாழ்த்துக்களை கூறுங்கள்!

# தீராவி தேசியம்



"நம் காலக்கில் மனிதர் களைப் பலமாக இயக்கிவைக் கும் குழுப் பற்றுகிய தேசிய இன்த்தைப் பற்றி ஒரு நூற் றாண்டுகால ஆராய்ச்சி எந்த விதமான நுண்ணிய — எல் லாரும் ஒப்புக் கொள்ளக் கூடிய-வியாக்யானத்தையும் ஏற்படுத்தவில்லை" — என்று பாயிட் ஷேபர் தன்னுடைய ஆராய்ச்சி நூலில் குறிப்பிடு கிறார்.

"தேசிய இனம் எவற்றைக் கொண்டிருக்கிறது, எவற் றை அநாவசியமானது என்று விலக்குகிறது என்று சிறிய—பாண்டித்யம் உள்ள —ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களில் விளக்கக் கூடிய-நுண்ணிய-வியாக்யா னம் அளிப்பது என்பது முடியாத காரியம்"

—என்றும் அவர் கூறுகிறார். கண்டவர் விண்டிலர்; விண் டவர் கண்டிலர் என்னும்வகை யில் விவரிக்க முடியாத ஒன் றாக 'தேசிய இனம்' என்னும் வார்த்தைக் கூட்டு இருப்பா னேன்?

தேசிய இனம் என்று ஆங்கி லத்தில் வழங்கப்படுகிற Nationalism என்னும் வார்த் தையின் லத்தீன் வேர்ச்சொல் லிற்கு I am born (நான் பிறந்தேன்) என்பது பொருள். எனவே ஒரு நாட்டுக்கு நாடு, காலத்திற்குக் காலம், எங்கு பிறக்கிறதோ — அதற்குத் தகுந்தவாறு தேசிய இனத்திற் கான தத்துவமும் மாறிக் கொண்டேயிருக்கிறது. ஒவ் வொரு நாட்டின் வரலாற்றை யும் எடுத்துக் கொண்டால் ஒவ்வொரு விதமாக அங்கே தேசிய இன உணர்ச்சி வளர்ந் திருக்கிறது.

மாறன். எம்.ஏ.,



மொழிமசோதாவந்த நேரத்தில் ஏன் தி. மு கழகத்தினர் கூச்சல் போட்டிருக்கக் கூடாது என்று யாரோ ஒருவர் கேட்டாராம்.

கூச்சல் மட்டும் போடுகிறவர்கள் கூச்சல் போடலாம். நாங்கள் பாராளுமன்றத்தில் இருப்பது விஷய விளக்கம் தருவதற்குத்தான். எஸ். ஐ. ஏ. ஏ. மைதானத்தில் குத்துச் சண்டை நடக்கிறபோது காலரியிலே உட்கார்ந்திருப்பவன், "இப்படிக் குத்து, அப்படிக் குத்து" என்பான். குத்துகிறவனும் அவனல்ல, வாங்குகிறவனும் அவனல்ல. குத்துச் சண்டை முடிந்த பிறகு கூறுவான் "சேசே நானுயிருந்தால்"..என்று.

"ஏன். நீ போடுவது தானே என்றூல்"---"என்னேத்தான் சேர்க்கலேயே" என்பான். அதைப் போல ஒருவர் பேசுகிறார். ஆனல் நல்ல யோசனேகளைச் சொல்லுகிறார். தமிழ் நாட்டில் அது ஒன்றுதான் குறைவு என்றுஎண்ணிக்கொண்டு! எனவே, நாம் செய்ய வேண்டிய காரியத்தைப் பற்றி பிறர் உபதேசம் செய்து தெரிந்து கொள்ளும் நிலேயில் நாம் இல்லே.

--அறிஞர் அண்ணு

ஆதி மனிதன் முதலில் தனது குடும்பத்திடம் மட்டுமே விசுவாசமாக இருந்தான். ஒரு குடும்பமும் இன்னெரு குடும்பமும் பகைவர்களாக வாழ்ந்தார்கள்.

பிறகு, மனிதன், தான் சார்ந்திருக்கும் கூட்டத்திற்கு விசுவாசம் செலுத்தத் துவங்கினன். அந்தக் காலத்தில் ஒரே பிராந்தியத்தில் வசிக்கிற ஒரு கூட்டம் அந்தப் பிராந்தியத்தில் வசிக்கிற இன்னெரு கூட்டத்தை வைரியாகக் கருதியது.

பிறகு, இந்தக் கூட்டம் வளர்ந்து; அது தங்கியிருந்த இடம் கிராமமாக—நகரமாக—மாறியது. அப்போது ஒரு கிராமம் அல்லது நகரம் இன்னெரு கிராமம் அல்லது நகரத்தை எதிரியாக நினேத்தது.

பின்னர், குறுநில மன்னர்கள் — சக்கரவர்த்திகள்! அவர்களுக்குள்ளே பகைமை! அவர்களுக்குக் கீழே பல திறப்பட்ட மக்கள்! அந்த மக்களிடையே மத வேறுபாடு!

இந்த நிலேமை மாறி-அந்தப் பலதிறப்பட்ட மக்களிடையே பல பிரிவுகள் தோன்றி, அந்தப் பிரிவுகள் இனமாக உருவெடுத்து; அந்த இனம் வாழுமிடம் ஒரு தேசம் — அந்தத் தேசத்திற்கு ஒரு அரசாங்கம் என்று நிலேமை மாறியது.

இப்போது பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி என்று அழைக்கப்படுகிற நாடுகளிலே வாழ்வோர் அப்போது ஒருவருக்கொருவர் சண்டையிட்டு சகோதரக் கொலேயிலே ஈடுபட்டு வந்தார்கள்.

பிறிதொரு சந்தர்ப்பத்தில் தான் தாங்கள் சண்டையிட்டு வருவது வேறு யாரோடுமல்ல; தங்கள் சகோதரர்களோடு-என்கிற உணர்ச்சி தோன்றியது!

குடும்பத்திற்கு - கூட்டத்திற்கு - குறுநில மன்னருக்கு - சக்கரவர்த்திக்கு இதுவரை விசுவாசம் காட்டிவந்த மனிதன் இந்த நேரம், தான் சார்ந்திருக்கும் இனத்திற்கு -அந்த இனத்திற்கு உண்டான அரசாங்கத்திற்குத் தனது விசுவாசத்தைக் காட்டினன். அந்தக் காலம்தான் தேசிய இனம் உருவான காலம். ஐரோப்பாவில் அப்படி தேசிய இனங்கள் பிறந்த காலத்தை 18-ம் நூற்றுண்டின் பிற்பகுதி என்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

தேசிய இனம் என்பது சாதாரண மனித உணர்ச்சிகளே அடிப்படையாகக் கொண்டதுதான். பிறந்த இடத்தையும், பாலபருவத்தைக் கழித்த இடத்தையும் நேசிப்பதும், வசிக்கும் இடத்தின் சுற்றுப் புறங்களே, மலேகளே, மரங்களே, மாநதிகளேப் பிடித்தமாக்கிக் கொள்வதும் மனித இயல்பு. முன்பின் தெரியாத இடத்தில் சில நாட்களேக் கழிக்க நேரிட்டாலும் நமக்குப் பழக்கப்பட்ட இடத்திற்குத் திரும்பி வரத்தூண்டுவது நமக்குள்ளே தணிக்க முடியாமல் வளர்ந்திருக்கும் வேட்கையாகும். அன்னிய உணவு முறைகள் சுவையாக இருந்தாலும் அவன் என்றும் உண்ண விரும்புவது சொந்த நாட்டு உணவு வகைகளேத்தான். எங்கெங்கோ வெளி நாடுகளில் சுற்ற நேர்ந்தாலும், அங்குள்ள இயற்கைக் காட்சிகள் மனதை மயக்கும் வகையில் அமைந்திருந்தாலும், சொந்த ஊருக்குத திரும்பி, சொந்த வீட்டிற்குள் நுழைந்து, அன்ருடம் அமரும் நாற்காலியில் அமர்ந்து இளேப் பாறுவது இருக்கிறதே அதற்கு ஈடாக எதுவும் இல்லே— என்றுதான் பலரும் கூறக் கேட்டிருக்கிறேரும் .அதனுல் தான் மனிதன் தன் சொந்தப் பழக்கவழக்கங்களே உயர்ந்ததாகக் கருதுகிறன். அன்னியப் பழக்கங்களின் வேறுபாடு அவனுக்கு இதமளிப்பதில்லே. ஒன்று அவற்றைக் கண்டு நாம் மேலானவர்கள்—என்ற உயர்வு மனப்பான்மை எழுகிறது. அல்லது அவற்றின் பாலவெறுப்பு தோன்றுகிறது.